


PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 260 02.05.2026 சனிக்கிழமை | Chennai | Volume: 01 | Issue: 260 | Saturday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

சனிக்கிழமை
(02-05-2026)
பராபவ ஆண்டு, சித்திரை-19
பிறை: தேய்பிறை
திதி
பிரதமை நள்ளிரவு 1247 வரை பிறகு துவிதியை,
நட்சத்திரம்:
விசாகம் (முழுவதும்)..
யோகம்
சித்த யோகம்
ராகுகாலம்
9.00-10.30 மணி.
எமகண்டம்
நண்பகல் 1.30-3.00 மணி
சூலம் - மேற்கு
நல்ல நேரம் :
காலை 7-8 மணி.
மாலை 5-6 மணி.

| | |
|---|---|
| மேஷம் | உதவி |
| ரிஷபம் | தாமதம் |
| மிதுனம் | பணிவு |
| கடகம் | சுகம் |
| சிம்மம் | பாசம் |
| கன்னி | உறுதி |
| துலாம் | தனம் |
| விருச்சிகம் | மகிழ்ச்சி |
| தனுசு | துணிவு |
| மகரம் | நட்பு |
| கும்பம் | நலம் |
| மீனம் | உவகை |

# வாக்கு எண்ணும் மையங்களில் 'க்யூஆர்' குறியீடு அடையாள அட்டை

## புதிய நடைமுறையை அறிமுகம் செய்த தேர்தல் ஆணையம்

**சென்னை, மே 2:**

தேர்தல் நடத்தும் அதிகாரிகள், உதவி அதிகாரிகள், வாக்கு எண்ணும் ஊழியர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள், வேட்பாளர்கள், தேர்தல் மற்றும் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் உள்பட வாக்கு எண்ணும் மையங்களில் நுழைய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட அனைவருக்கும் இந்த அட்டை வழங்கப்படவுள்ளது.

தமிழகம் (234 தொகுதிகள்), கேரளம் (140), மேற்கு வங்கம் (294), அஸ்ஸாம் (126) மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் (30) பேரவைத் தேர்தல்கள் நடைபெற்று முடிந்துள்ளன. கர்நாடகம் உள்பட 5 மாநிலங்களில் 7 பேரவைத் தொகுதிகளுக்குஇடைத்தேர்தலும் நடத்தப்பட்டுள்ளது.

இத்தேர்தல்களில் பதிவான வாக்குகள் மே 4-ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.




இதையொட்டி, வாக்கு எண்ணும் மையங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மையங்களில் அங்கீகாரமில்லாத நபர்களின் நுழைவைத் தடுக்கும் நோக்கில், க்யூ ஆர் கோடு அடிப்படையிலான அடையாள அமைப்புமுறையை தேர்தல் ஆணையம் அறிமுகம் செய்துள்ளது.

புதிய முன்னெடுப்புகள்: இது தொடர்பாக, தேர்தல் ஆணையம் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழகம், கேரளம், மேற்கு வங்கம், அஸ்ஸாம், புதுச்சேரி பேரவைத் தேர்தல்கள் மற்றும் 5 மாநில இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கையை முன்னிட்டு, வாக்கு எண்ணும் மையங்களின் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் க்யூ ஆர் கோடு அடிப்படையிலான அடையாள அமைப்புமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நடைபெறும் அனைத்துத் தேர்தல்களிலும் இந்த அமைப்புமுறை செயல்படுத்தப்படும்.

கடந்த ஓராண்டில் தேர்தல் ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்ட 30-க்கும் மேற்பட்ட முன்னெடுப்புகளின் தொடர்ச்சியே இந்த நடவடிக்கையாகும்.

மூன்றடுக்கு செயல்முறை: வாக்கு எண்ணும் மையங்களில் அனுமதிக்கப்படுவோரின் அடையாளங்களைச் சரிபார்க்க மூன்றடுக்கு செயல்முறை பின்பற்றப்படும். முதல் மற்றும் இரண்டாம் நிலைகளில், தேர்தல் நடத்தும் அதிகாரியால் வழங்கப்பட்ட புகைப்பட அடையாள அட்டைகள், பாதுகாப்பு அதிகாரிகளால் நேரடியாக சரிபார்க்கப்படும்.

வாக்கு எண்ணும் அறைக்கு அருகே மூன்றாவது பாதுகாப்பு வளையத்தில், க்யூ ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்து வெற்றிகரமாக சரிபார்த்த பின்னரே நுழைவு அனுமதிக்கப்படும்.

இந்த அடையாள அட்டைகள், வாக்கு எண்ணும் மையங்கள் மற்றும் அறைகளுக்குள் நுழைய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட நபர்களுக்கு பொருந்தும். தேர்தல் நடத்தும் அதிகாரிகள், உதவி அதிகாரிகள், வாக்கு எண்ணும் பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள், வேட்பாளர்கள், தேர்தல் மற்றும் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் உள்ளிட்டோர் அடங்குவர்.

தற்போதைய அறிவுறுத்தல்களுக்கு இணங்க, தேர்தல் ஆணையத்தால் வழங்கப்படும் அனுமதிக் கடிதங்களின் அடிப்படையில் ஊடகவியலாளர்களின் நுழைவு அனுமதிக்கப்படும். க்யூ ஆர் குறியீடு அடிப்படையிலான புதிய முறை திறம்பட செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்ய, உரிய பயிற்சி பெற்ற பணியாளர்களைப் பணியமர்த்துவது உள்பட தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ளும்படி மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் மற்றும் தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# பச்சைப் பட்டு உடுத்தி வைகையில் இறங்கினார் கள்ளழகர்!

**மதுரை, மே 2:**

மதுரை மாவட்டம், அழகர்கோயிலில் அமைந்துள்ள அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் சித்திரைத் திருவிழா கடந்த 27-ஆம் தேதி தொடங்கி நடைபெறுகிறது. இந்த விழாவின் மூன்றாம் நாளான புதன்கிழமை மாலை சுந்தரராஜப் பெருமாள் (உத்ஸவர்) கள்ளர் கொண்டை, கையில் வலைத்தடி, இடுப்பில் கட்டாரி தரித்து கள்ளழகர் கோலம் ஏற்று வைகை ஆற்றில் இறங்கும் வைபவத்துக்காக தங்கப் பல்லக்கில் மதுரைக்குப் புறப்பட்டார்.

மதுரை மூன்றுமாவடி பகுதியில் வியாழக்கிழமை அதிகாலை எழுந்தருளிய கள்ளழகரை பக்தர்கள் எதிர்கொண்டு வரவேற்ற எதிர்சேவை நிகழ்ச்சி நடைபெற்றது. அங்கிருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ புறப்பாடாகிய கள்ளழகர் வழிநெடுகிலும்



அமைக்கப்பட்டிருந்த திருக்கண் மண்டபங்களில் எழுந்தருளி சேவை சாதித்து, வியாழக்கிழமை இரவு மதுரை தல்லாகுளம் பிரசன்ன வெங்கடாஜலபதி கோயிலில் எழுந்தருளினார். அங்கு நடைபெற்ற சிறப்பு வழிபாடுகள், திருமஞ்சனத்துக்குப் பிறகு கள்ளழகர் வேடத்தைக் களைந்து, சுந்தரராஜப் பெருமாள் அலங்காரத்தில் தங்கக் குதிரை வாகனத்தில் வைகைக்குப் புறப்பட்டார். இதனிடையே, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் தாயார் சூடிக் களைத்த மாலையை சுந்தரராஜப் பெருமாள் ஏற்கும் ஐதீக நிகழ்வு கோயிலின் உள் பிராகாரத்தில் நடைபெற்றது. இதையடுத்து, திருக்கண் மண்டபங்களில் எழுத்தருளி வெள்ளிக்கிழமை அதிகாலை சுமார் 2 மணி அளவில் தல்லாகுளம் கருப்பண சாமி கோயில் அருகே நிறுத்தப்பட்டிருந்த ஆயிரம் பொன் சப்பரத்தில் பெருமாள் எழுந்தருளினார். சிறப்பு வழிபாடுகளுக்குப் பிறகு தங்கக் குதிரை வாகனத்தில் வைகையாற்றுக்கு புறப்பட்டார்.

திரியெடுத்து ஆடுவோர், திரியின்றி ஆடுவோர், கள்ளழகர் வேட மேற்றோர் முன்னும், பின்னும் அணி வகுக்க லட்சக்கணக்கான பக்தர்கள் புடைசூழ பக்தர்களின் இடைவிடாத பக்தி முழக்கங்களுக்கு இடையே ஆழ்வார்புரம் வைகை ஆற்றங்கரையில் பச்சைப்பட்டு உடுத்தி தங்கக்குதிரை வாகனத்தில் அதிகாலை சுமார் 5.48 மணிக்கு அழகர் வைகையாற்றில் இறங்கி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். அப்போது, அங்குக் குழுமியிருந்த லட்சக்கணக்கான பக்தர்கள் கோவிந்தா, கோவிந்தா என பக்தி முழக்கங்களை எழுப்பி வைகைத் தீர்த்தத்தை வாரித் தெளித்து அழகரை தரிசனம் செய்தனர்.

# அதிரடியாக உயர்ந்த வர்த்தக சிலிண்டர் விலை




**சென்னை, மே 2:**

சர்வதேச சந்தையில் நிலவும் கச்சா எண்ணெய் விலை மற்றும் அந்நியச் செலாவணி மதிப்பை கணக்கில்கொண்டு, பொதுத்துறை நிறுவனங்களான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் மற்றும் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகியவை சமையல் எரிவாயு சிலிண்டர் மற்றும் விமான எரிபொருள் விலையை ஒவ்வொரு மாதமும் ஒன்றாம் தேதி மாற்றியமைத்து வருகின்றன.

இந்த நிலையில், மே மாதத்தில் வர்த்தகப் பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு (எல்பிஜி) சிலிண்டர் விலை அதிரடியாக வெள்ளிக்கிழமை (மே.1) ரூ. 993 உயர்த்தப்பட்டுள்ளது.

அதன்படி, உணவகங்களில் பயன்படுத்தப்படும் 19 கிலோ எடை கொண்ட வர்த்தக சிலிண்டர் ஒன்றின் விலை ரூ.993 உயர்த்தப்பட்டுள்ள நிலையில், சென்னையில் வணிக சிலிண்டர் விலை ரூ. 3,237-க்கு விற்பனையாகிறது. மும்பையில் ரூ.2,031-க்கு விற்பனையான சிலிண்டர் விலை ரூ.3,024-ஆகவும், புதுடில்லியில் ரூ.3,071.50 ஆகவும் விற்பனையாகிறது.

அமெரிக்கா-இஸ்ரேல், ஈரான் இடையே போர் தொடங்கிய பிப்ரவரி 28 முதல் 19 கிலோ வர்த்தக பயன்பாட்டுக்கான சிலிண்டரின் விலை மூன்று முறை உயர்த்தப்பட்டுள்ளது. முதலில் மார்ச் மாதம் ரூ.144 உயர்த்தப்பட்ட நிலையில், ஏப்ரல் 1 ஆம் தேதி ரூ.200 உயர்த்தப்பட்ட நிலையில், மே 1 ஆம் தேதி அதிரடியாக ரூ.993 உயர்த்தப்பட்டுள்ளதை அடுத்து வர்த்தக சிலிண்டர் விலை தற்போது புதிய உச்சம் அடைந்துள்ளது. ஐந்து மாநில சட்டப்பேரவை க்கான வாக்குப்பதிவுக்குப் பிறகு வீட்டு உபயோக சிலிண்டருக்கான விலை மத்திய அரசு உயர்த்தவில்லை.

வர்த்தக சிலிண்டர் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால் உணவகங்களில் விலை உயர்த்தப்பட்டுள்ள நிலையில், உணவுகளின் விலை மேலும் உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது.

# மே 5 வரை சென்னை, வேலூரில் கடும் வெப்ப நிலை நிலவும்!



**சென்னை, மே 2:**

கோடை வெய்யிலின் தாக்கம் நடப்பு ஆண்டு அதிக அளவு உள்ளது. தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் கடந்த ஒரு வாரமாக வெய்யில் 100 டிகிரியை தாண்டி வருகிறது.

இதனிடையே, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் மாவட்டங்களில் ஆங்காங்கே மழையும் பெய்து வருகிறது.

இந்த நிலையில், தமிழ்நாட்டில் நிலவும் வெப்பநிலை தொடர்பாக தமிழ்நாடு வெதர்மேன் என்றழைக்கப்படும் பிரதீன் ஜான் தன்னுடைய எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்திருப்பதாவது:

”பல நாள்கள் இடைவெளிக்குப் பிறகு, கரூர், தருமபுரி, ஈரோடு மற்றும் சேலம் பகுதிகளில் தீவிர இடியுடன் கூடிய மழை பதிவாகியுள்ளது. உள் தமிழகம், தெற்கு மற்றும் மேற்கு தமிழ்நாட்டில் மேலும் மழை எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த 5 நாள்கள் (மே 5 வரை), வேலூரிலிருந்து சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் வரை கடும் வெப்பம் நிலவும். அதன் பிறகு வெப்பநிலை குறையும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

# 'மே தினம்' - அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்து

**சென்னை, மே 2:**

உலகம் முழுவதும் தொழிலாளர் தினம் இன்று (மே 1) கொண்டாடப்படுகிறது. இதையொட்டி தொழிலாளர்களுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட வாழ்த்து செய்திகளில் கூறியிருப்பதாவது:

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** சென்னைசிந்தாதிரிப்பேட்டையில் உள்ள மே தின பூங்காவில் உள்ள தொழிலாளர் தின நினைவுச்சின்னத்தில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார். அவருடன் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்களும் மரியாதை செலுத்தினர். இதையடுத்து பேசிய முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், நமது உழைப்புக்கான பலன் 4ம் தேதி கிடைக்கும். அதில் துளி அளவும் மாற்றமில்லை. எல்லோருக்கும் எல்லாம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் திமுக செயல்படுகிறது' என்றார்.



**அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி:** உழைப்புதான் நம்மை உயர்த்தும். உழைப்பின் பயனால் கிடைக்கும் உயர்வே மனநிறைவு அளிக்கும். அந்த வகையில், உழைக்கும் கரங்களின் ஒற்றுமையை உணர்த்தி, உழைப்பின் பெருமையை உலகுக்குப் பறைசாற்றும் மே தினத்தில், தொழிலாளர்கள் அனைவருக்கும் உளங்கனிந்த மே தின நல்வாழ்த்துகள்.

**தமிழக காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை:** நாட்டின் ஒவ்வொரு முன்னேற்றத்துக்கும் அடிப்படை காரணம் தொழிலாளர்களின் அர்ப்பணிப்பு. அவர்களின் உரிமைகள் காக்கப்பட வேண்டும். உழைப்போரை உயர்த்தி சமத்துவத்தை நிலை நிறுத்துவோம்.

**மதிமுக பொதுச்செயலாளர் வைகோ:** இதுவரை இல்லாத அளவுக்கு தொழிலாளர் வர்க்கத்தின் மீது மோசமான தாக்குதலை பிரதமர் மோடியின் அரசு தொடுத்து வருகிறது. உழைக்கும் தோழர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடுவோம் என உறுதியேற்போம்.

தி.க தலைவர் கி.வீரமணி: பன்னாட்டு முதலாளிகளாலும், பிறவி முதலாளிகளாலும் சுரண்டப்படுவதை எதிர்த்து போராடி, தொழிலாளர்களின் வாழ்வில் விடியலைக் கொண்டுவந்த நாள் இன்று.

**மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம்:** உழைப்பவருக்கே உலகம் உரியது. 8 மணி நேர வேலை, 8 மணி நேர ஓய்வு, 8 மணி நேர உறக்கம் என்பதை உயிர் நீத்து போராடி பெற்றுக்கொடுத்த தியாகிகளுக்கு வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

**இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன்:** தொழிலாளர்களின் ஒற்றுமையாலும் ஒன்றுபட்ட போராட்டங்களினாலும் மட்டுமே, அவர்களுக்கான உரிமைகளை உறுதிப்படுத்த இயலும். அத்தகைய ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் உறுதியாகக் கட்டியமைக்க, இந்த மே தினத்தில் உறுதி ஏற்போம்.

**பாமக தலைவர் அன்புமணி:** நியாயமான ஊதியம், விடுமுறை, 8 மணி நேர பணி, ஓய்வூதியம் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்புகள் என அனைத்தையும் வென்றெடுத்துக் கொடுப்பதன் மூலம், பாட்டாளிகளுக்கு ஒளிமயமான எதிர்காலம் அமைத்து கொடுக்க இந்நாளில் உறுதியேற்போம்.

மேலும், தமாகா தலைவர் ஜி.கே.வாசன், அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன், தவாக தலைவர் தி.வேல்முருகன், ஐஜேகே தலைவர் ரவிபச்சமுத்து, முன்னாள் எம்.பி சு. திருநாவுக்கரசர், கொமதேக பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன், பெருந்தலைவர் மக்கள் கட்சி தலைவர் என்.ஆர்.தனபாலன், உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் மே தின வாழ்த்து தெரிவித்துள்ளனர்.



## ரூ.500 டம்மி நோட்டை கொடுத்து ஏமாற்றிய பெண் திருவொற்றியூர் மூதாட்டிக்கு உதவி கள் குவிகிறது



**சென்னை, மே 02:**

திருவொற்றியூரில் மாம்பழ வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் மூதாட்டி ஒருவரிடம் பெண் ஒருவர் பழம் வாங்கியுள்ளார். பின்னர் அவர் மளிகை கடைகளில் விற்பனை செய்யும் சிறுவர்கள் விளையாடும் டம்மி 500 ரூபாய் நோட்டை கொடுத்து மூதாட்டியை ஏமாற்றி விட்டு சென்றுள்ளார்.

இதைத் தொடர்ந்து அந்த டம்மி ரூபாய் நோட்டை காட்டியபடி மூதாட்டி கண்ணீர் விட்டு அழுதார். அந்த வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி பரிதாபத்தை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மூதாட்டியை தேடிச் சென்று பலரும் உதவி செய்து வருகிறார்கள். வாலிபர் ஒருவர் மூதாட்டியை சென்று பார்த்து 1 கிலோ மாம்பழம் வாங்கியுள்ளார். 1 கிலோ மாம்பழம் 150 ரூபாய் என்று மூதாட்டி கூறும் நிலையில் அந்த வாலிபர் நேற்று என்ன நடந்தது? என்று விசாரித்துள்ளார்.

அப்போது மூதாட்டி கள்ள நோட்டை கொடுத்து விட்டு போய்ட்டாங்கய்யா.. என்று அப்பாவி தனமாக கூறுகிறார். இதைத் தொடர்ந்து அந்த வாலிபர் மூதாட்டியிடம் ரூ.3 ஆயிரத்தை கையில் கொடுத்து விட்டு இதனை வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறியதுடன் உஷாராக இருக்கவும் அறிவுறுத்துகிறார்.

## சித்ரா பவுர்ணமி – திருவண்ணாமலையில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம்





**திருவண்ணாமலை, மே 02:**

உலக புகழ்பெற்ற சிவஸ்தல மாகவும், ஆன்மிக தலைநகரமாகவும் உள்ள திருவண்ணாமலையில் உள்ள அருணாசலேஸ்வரர் கோவிலில் சாமி தரிசனம் செய்யவும், மலையே சிவனாக வணங்கப்படும் அண்ணாமலையை வலம் வரவும் ஏராளமான பக்தர்கள் திருவண்ணாமலைக்கு வருகிறார்கள்.

பவுர்ணமி, சித்ரா பவுர்ணமி, கார்த்திகை தீப தரிசன நாள் ஆகியவற்றின்போது பல மாவட்டங்கள், பல மாநிலங்களில் இருந்து பல லட்சம் பக்தர்கள் திருவண்ணாமலையில் உள்ள அண்ணாமலையை வலம் வந்து வழிபடுகின்றனர்.

இந்த ஆண்டு சித்ரா பவுர்ணமி நேற்று இரவு முன்தினம் 9.52 மணிக்கு தொடங்கி நேற்று இரவு 11.02 மணிக்கு நிறைவு பெற்றது. சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு நேற்று காலை முதலே திருவண்ணாமலையில் உள்ள அண்ணாமலையை வலம் வரவும், அருணாசலேஸ்வரரை தரிசனம் செய்யவும் பக்தர்கள் திருவண்ணாமலைக்கு வரத்தொடங்கினர்.

பக்தர்களின் வசதிக்காக மாவட்ட நிர்வாகம் சார்பில் குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டிருந்தது. பக்தர்களின் பாதுகாப்பிற்காக கூடுதல் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

நகரில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் நோக்கில் நகருக்கு வரும் வழிகளில் ஏராளமான கார் நிறுத்தும் மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இன்று இரவு 11.02 மணிவரை பவுர்ணமி உள்ளதால் அதிகாலை முதலே பக்தர்கள் கிரிவலம் செல்ல தொடங்கினர்.

சித்ரா பவுர்ணமி நாளில் ஏராளமான பக்தர்கள் கோவிலில் சாமி தரிசனம் செய்ய வந்ததால் 5 மணி நேரத்திற்கும் மேலாக நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

## கேரளாவில் கோயில் திருவிழாவிற்காக கொண்டு வரப்பட்ட யானை மிதித்து ஒருவர் பலி!



**கொல்லம், மே 2:**

கேரள மாநிலம் அங்கமாலி, கிடங்கூர் மஹாவிஷ்ணு கோயில் திருவிழாவிற்காக கொண்டு வரப்பட்ட வளர்ப்பு யானை, திடீரென மதம்பிடித்து ஆக்ரோஷமான நிலையில், அதனை கட்டுப்படுத்த முயன்ற லாரி ஓட்டுநரை மிதித்து கொன்ற சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் அதன் தலைமைப் பாகன் உட்பட இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

கொல்லம் மாவட்டம் மையநாட்டைச் சேர்ந்த 'மையநாடு பார்த்தசாரதி' என்ற வளர்ப்பு யானை அருகிலுள்ள கோயிலில் நடைபெற்ற விழாக்களில் பங்கேற்ற பிறகு, ஸ்ரீ மகாவிஷ்ணு கோயில் திருவிழாவிற்காக கொண்டுவரப்பட்டுள்ளது.

யானையைக் குளிப்பாட்டி விட்டு கோயிலுக்கு அழைத்துச் சென்றபோது, திடீரென ஆக்ரோஷமாகி பாகர்களின் கட்டுப்பாட்டை மீறி, அங்கிருந்து ஓட தொடங்கியுள்ளது. அப்போது கோயில் வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் மற்றும் இருசக்கர வாகனங்கள் சேதப்படுத்தியுள்ளது. ஒருகாரை பலமுறை கவிழ்த்து முற்றிலுமாக சேதப்படுத்தியுள்ளது.

மிகுந்த ஆக்ரோஷத்தில் இருந்த நிலையில் அங்கு நின்றுக்கொண்டிருந்த மக்களையும் தாக்க முயன்றுள்ளது. அப்போது நிலைமையைக் கட்டுப்படுத்த முயன்றபோது, அதனை ஏற்றவந்த லாரி ஓட்டுநர் விஷ்ணு யானையிடம் சிக்கி சம்பவ இடத்திலேயே பலியானார்.

யானையின் பாகன் பிரதீப் உட்பட இருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். யானை லாரி ஓட்டுநரை மிதித்த நிலையில், அவரது உடலுக்கு அருகிலேயே இருந்துள்ளது.

இதனால் அவரை மீட்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து வனத்துறையின் விரைவு மீட்புக் குழு சம்பவ இடத்திற்கு விரைந்து, கால்நடை மருத்துவர் அதற்கு மயக்க மருந்து செலுத்தி அமைதிப்படுத்தியுள்ளார். இதனைத்தொடர்ந்துயானையை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

கேரளாவில் இதுபோன்ற சம்பவங்கள் இயல்பாக நிகழ்கின்றன. யானைகளை கோயில் திருவிழாவிற்கு பயன்படுத்துவதில் அம்மாநில உயர் நீதிமன்றம் பல்வேறு கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## நுழைவு கட்டண விவகாரம் கொடைக்கானலில் வனத்துறையை கண்டித்து வாகன ஓட்டுநர்கள் போராட்டம்



**கொடைக்கானல்,மே 02:**

கொடைக்கானலில் வனத்துறை சுற்றுலா இடங்களுக்கு ஒரே இடத்தில் நுழைவு கட்டணம் வசூலிக்கும் வனத்துறையை கண்டித்து, நேற்று (மே 1) காலை முதல் சுற்றுலா வாகன ஓட்டுநர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் உள்ள அனைத்து வனத்துறை சுற்றுலா இடங்களுக்கும் கடந்த ஜனவரி 12-ம் தேதி முதல் ஒரே இடத்தில் 'க்யூ ஆர் கோடு' மூலம் நுழைவு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்த நடைமுறையால் விடுமுறை நாட்களில் பசுமை பள்ளத்தாக்கு பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனால் சுற்றுலா பயணிகள் மற்றும் உள்ளூர் மக்கள் பாதிக்கின்றனர்.

எனவே, பழைய முறைப்படி அனைத்து வனத்துறை சுற்றுலா இடங்களுக்கும் அந்தந்த இடத்திலேயே தனித்தனியாக நுழைவு கட்டணம் வசூலிக்க வேண்டும் என வலியுறுத்தி, ஏப்ரல் 19-ம் தேதி கொடைக்கானலில் அனைத்து சுற்றுலா வாகன ஓட்டுநர்கள், உரிமையாளர்கள் வாகனங்களை இயக்காமல் பேருந்து நிலையத்தில் காலவரையற்ற வேலை நிறுத்தம் மற்றும் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது, அவர்களுடன் அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தியதில், 5 நாட்களுக்குள் வனத்துறை சுற்றுலா இடங்களில் தனித்தனியாக நுழைவு கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என முடிவெடுக்கப்பட்டது. இதையடுத்து, வாகன ஓட்டுநர்கள் போராட்டத்தை கைவிட்டனர். தற்போது கோடை சீசனை முன்னிட்டு சுற்றுலா பயணிகள் படையெடுத்து வருகின்றனர்.

அதனால் கொடைக்கானல் நகர் மற்றும் அனைத்து சுற்றுலா இடங்களிலும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதற்கிடையே, அனைத்து வனத்துறை சுற்றுலா இடங்களுக்கும் பசுமை பள்ளத்தாக்கு பகுதியில் நுழைவு கட்டணம் வசூலிக்கும் முறை தொடர்வதால் அப்பகுதியை சுற்றுலா வாகனங்கள் கடந்து செல்ல குறைந்தது 30 நிமிடங்கள் முதல் ஒரு மணி நேரமாகிறது. அதனால் மலைச்சாலையில் வாகனங்கள் பல கி.மீ., தூரத்துக்கு அணிவகுத்து நிற்கும் நிலை ஏற்படுகிறது.

இதனால் சுற்றுலா பயணிகள் மட்டுமின்றி அன்றாட பணிகளுக்கு செல்லும் உள்ளூர் மக்களும் பெரிதும் பாதிக்கின்றனர். இந்நிலையில் வெள்ளிக்கிழமை (இன்று) காலை முதல் வனத்துறை நுழைவு கட்டணம் வசூலித்து வரும் பசுமை பள்ளத்தாக்கு பகுதியில் சுற்றுலா வாகன ஓட்டுநர்கள் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சாலையின் குறுக்கே சுற்றுலா வானங்களை நிறுத்தி வைத்துள்ளனர். இதனால் அந்த வழியாக வாகனங்களில் சுற்றுலா பயணிகள் செல்ல முடியாமல் தவித்து வருகின்றனர். பலர் வாகனங்களிலேயே காத்திருக்கின்றனர். ஒரே இடத்தில் நுழைவு கட்டணம் வசூலிக்கும் திட்டத்தை கைவிடக்கோரியும், வனத்துறையா? வசூல் துறையா? என சுற்றுலா வாகன ஓட்டுநர்கள் கோஷமிட்டு வருகின்றனர்.

## கடல் மீன் உற்பத்தி 3% உயர்வு குஜராத்தை பின்னுக்குத் தள்ளி தமிழகம் முதலிடம்



**கொச்சி, மே 02:**

இந்தியாவின் கடல் மீன் உற்பத்தி கடந்த 2025-ம் ஆண்டில் 3 சதவீதம் அதிகரித்து 35.7 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இதில் குஜராத் மாநிலத்தைப் பின்னுக்குத் தள்ளி தமிழகம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இது குறித்து மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிறுவனம் நேற்று வெளியிட்ட ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: கடந்த ஆண்டில் 6.85 லட்சம் டன் மீன் உற்பத்தியுடன் தமிழகம் நாட்டின் முதன்மை மாநிலமாக உருவெடுத்துள்ளது. இதற்கு முன்பு முதலிடத்தில் இருந்த குஜராத், மோசமான வானிலை மற்றும் புயல் பாதிப்புகள் காரணமாக 15 சதவீத சரிவைச் சந்தித்து இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டது. கேரளம் 6.24 லட்சம் டன் உற்பத்தியுடன் (2 சதவீத உயர்வு) மூன்றாவது இடத்தில் நீடிக்கிறது.


**அதிகம் பிடிக்கப்பட்ட மீன்**

கர்நாடகா 44 சதவீதமும், மகாராஷ்டிரா 18 சதவீதமும் மீன் உற்பத்தியில் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. தேசிய அளவில் கானாங்கெளுத்தி 2.70 லட்சம் டன்களுடன் அதிகம் பிடிபட்ட மீன் வகையாக முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்தபடியாக கணவாய் மீன்கள் (2.57 லட்சம் டன்) மற்றும் மத்தி மீன்கள் (2.53 லட்சம் டன்) ஆகியவை உள்ளன. கேரளத்தைப் பொறுத்தவரை மத்தி மீன்கள் 1.68 லட்சம் டன் பிடிபட்டு சாதனை அளவு எட்டப்பட்டுள்ளது.

**பொருளாதார மதிப்பு**

நாடு முழுவதும் பிடிபட்ட மீன்களின் மொத்த மதிப்பு விற்பனை மையங்களில் ரூ.69,254 கோடியாகவும், சில்லறை விற்பனை சந்தையில் ரூ.97,702 கோடியாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டை விட முறையே 10.45% மற்றும் 8.43% அதிகம். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விழுப்புரம் அருகே சோழர் கால சிற்பங்கள் கண்டெடுப்பு



**விழுப்புரம், மே 02:**

விழுப்புரம் மாவட்டம் பெரியதச்சூர் கிராமம் கலைவாணர் தெருவில், விநாயகர் கோவிலுக்கு வெளியே சாலையையொட்டி 2 சாமி சிலைகள் சமீபத்தில் கண்டறியப்பட்டது. இதுபற்றி கிராமத்தை சேர்ந்த சதீஷ்குமார் என்பவர், விழுப்புரத்தைச் சேர்ந்த வரலாற்று ஆய்வாளர் கோ.செங்குட்டுவனுக்கு தகவல் தெரிவித்தார்.

அதன்பேரில், வரலாற்று ஆய்வாளர் செங்குட்டுவன் தலைமையிலான குழுவினர் அங்கு சென்று, 2 சாமி சிலைகளை ஆய்வு செய்தனர். அப்போது அவை சோழர் கால பவுத்த சிற்பங்கள் என்பது தெரிய வந்தது. இதுகுறித்து ஆய்வாளர் செங்குட்டுவன் கூறியதாவது:-

பெரியதச்சூரில் கண்டறியப்பட்டுள்ள 2 சிற்பங்களில் ஒன்றில் வலது காலை தொங்கவிட்டு, இடது காலை மடக்கிய நிலையில் 'உத்குடி' ஆசனத்தில் அமர்ந்துள்ளார். அவரது தலைக்கு மேலே 5 தலை நாகம் படம் எடுத்த நிலையில் உள்ளது. இது ஒரு பவுத்த சிற்பமாகும். இதில் இருப்பது 'போதிசத்துவர்' என்று மூத்த கல்வெட்டு ஆய்வாளர் கோ.விஜய வேணுகோபால் உறுதிப்படுத்தியுள்ளார். ஏற்கனவே அருகிலுள்ள ஆலகிராமத்தில் பவுத்த சிற்பம் கண்டறியப்பட்ட நிலையில், தற்போது இங்கும் கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சைவம், வைணவம், சமணத்துடன் பவுத்தமும் செழித்து விளங்கியதை அறிய முடிகிறது.

அதேபோன்று, மற்றொரு சிற்பம் கலைநயமிக்க துவாரபாலகர் சிற்பமாகும். நீண்ட மகுடம், பெரிய கண்கள், கோரைப் பற்கள் மற்றும் காதணிகளுடன் காணப்படும் இந்த சிற்பம் மிகவும் நளினமான தோற்றத்தில் உள்ளது. இதன் கால்கள் மண்ணுக்குள் புதைந்துள்ளன. இச்சிற்பம் அங்கு முன்பு இருந்த ஏதோ ஒரு பழமையான சிவாலயத்திற்கு உரியதாக இருக்கலாம்.

இந்த இரண்டு சிற்பங்களும் கி.பி. 10 முதல் 11-ம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் கால சிற்பங்கள் ஆகும். மேலும், இப்பகுதியில் உள்ள அகஸ்தீஸ்வரர் கோவில் வளாகத்தில் பல்லவர் கால 'மூத்ததேவி' (ஜேஷ்டா) சிற்பமும் உள்ளது. இதன் மூலம் பல்லவர் மற்றும் சோழர் காலத்தில் இந்தக் கிராமம் வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாகத் திகழ்ந்துள்ளது உறுதியாகிறது. இத்தகைய வரலாற்றுச் சின்னங்களை கிராம மக்கள் உரிய முறையில் பாதுகாக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## தொடர் விடுமுறையையொட்டி தென்மாவட்டங்களை நோக்கி படையெடுப்பு- விக்கிரவாண்டி சுங்கச்சாவடியில் போக்குவரத்து நெரிசல்



**சென்னை, மே 02:**


தொடர்விடுமுறைஎன்பதால் விடுமுறையை கொண்டாட சென்னை தலைநகரில் வசிக்கும் தென்மாவட்டத்தை சேர்ந்தவர்கள் நேற்றுமுன்தினம் மாலை முதல் அரசு பஸ், ஆம்னி பஸ், கார், வேன், மோட்டார் சைக்கிள் என தங்களுக்கு விருப்பமான வாகனங்களில் தென் மாவட்டங்களை நோக்கி புறப்பட்டனர்.

இதனால் நேற்று முன்தினம் இரவு சாலையில் வாகனங்கள் அணிவகுக்க ஆரம்பித்தன. வாகனங்கள் சாலையில் அதிகரிக்க ஆரம்பித்ததால் விக்கிரவாண்டி சுங்கச்சாவடியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. தென்மாவட்டங்களை நோக்கி செல்லும் வாகனங்களுக்கு பொதுவாக 6 வழிகள் இருக்கும். வாகன நெரிசலை குறைக்க கூடுதலாக 3 வழிகள் திறந்து 9 வழியாக வாகனங்கள் தென் மாவட்டங்களை நோக்கி அனுப்பி வைக்கப்பட்டது.

மேலும் விக்கிரவாண்டி, பாப்பனப்பட்டு ஆகிய பகுதிகளில் மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருவதால் அந்த பகுதிகளில் சாலை மிகக் குறுகியதாக உள்ளதால் வாகன போக்குவரத்து மேலும் நெரிசல் ஏற்பட்டு அந்த பகுதியில் 3 கிலோ மீட்டர் தொலைவிற்கு வாகனங்கள் அணிவகுத்து பாம்பு போல ஊர்ந்து சென்றன.

இந்நிலையில் நேற்று பகல் 12 மணி முதல் இரவு 12 மணி வரை 48 ஆயிரத்து 126 வாகனங்கள், நள்ளிரவு 12 மணி முதல் இன்று காலை 10 மணி வரை 18 ஆயிரம் வாகனங்கள் என மொத்தம் 66 ஆயிரத்து 126 வாகனங்கள் தென் மாவட்டங்களை நோக்கி சென்றன. மேலும் தென் மாவட்டங்களை நோக்கி கூடுதலான வாகனங்கள் செல்லும் என சுங்கச்சாவடி அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தனுஷ்கோடியில் கடல் சீற்றம் பக்தர்கள், சுற்றுலா பயணிகளுக்கு கட்டுப்பாடு!



**ராமேசுவரம், மே 02:**

தனுஷ்கோடி கடலோரப் பகுதிகளில் கடல் சீற்றமாகக் காணப்படுவதால் பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள் கடலில் இறங்கி குளிக்க போலீஸார் தடை விதித்துள்ளனர்.

ராமேசுவரத்தில் இருந்து சுமார் 18 கிலோ மீட்டர் தொலைவில் தனுஷ்கோடியும், அங்கிருந்து 5 கி.மீ தொலைவில் அரிச்சல் முனை என்ற பகுதியும் உள்ளது. தனுஷ்கோடியைப் பார்ப்பதற்கு சுற்றுலாப் பயணிகளும், அரிச்சல் முனையில் புனித நீராட பக்தர்களும் இந்தியாவின் பல்வேறுப் பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான வாகனங்களில் தினந்தோறும் வந்து செல்கின்றனர்.

இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக தனுஷ்கோடியில் தெற்கு மன்னார் வளைகுடா கடற்பகுதி சீற்றமாகக் காணப்படுவதால் தனுஷ்கோடி - அரிச்சல் முனை தேசிய நெடுஞ்சாலையில் கடல் அரிப்பில் இருந்து பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட தடுப்பு வேலி கற்கள் சாலையில் சிதறி கிடக்கின்றன. கடல் சீற்றம் மற்றும் பலத்த காற்றினால் தனுஷ்கோடி, முகுந்த ராயர் சத்திரம், அரிச்சல் முனை ஆகிய பகுதிகளில் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு போலீஸார் தடை விதித்துள்ளனர்.

## திருச்செந்தூர் முருகன் கோவிலில் உண்டியல் காணிக்கை ரூ.3.95 கோடி



**தூத்துக்குடி, மே 02:**

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் பக்தர்கள் காணிக்கையாக உண்டியல்களில் செலுத்தும் பணம் மாதந்தோறும் எண்ணப்படுகிறது. இந்த நிலையில் கோவில் வளாகத்தில் நேற்று முன்தினம் தக்கார் அருள்முருகன் தலைமையில், இணை ஆணையர் ராமு முன்னிலையில் உண்டியல் காணிக்கை எண்ணும் பணி நடந்தது.

இதில் உதவி ஆணையர் மெய்வேல், தூத்துக்குடி உதவி ஆணையர் ராம சுப்பிரமணியன், கண்காணிப்பாளர் ரோகிணி, ஆய்வர் செந்தில்நாயகி, தக்காரின் நேர்முக உதவியாளர் செந்தமிழ்பாண்டியன், பொதுமக்கள் பிரதிநிதிகள் சுப்பிரமணியன், மோகன், கருப்பன் மற்றும் கோவில் பணியாளர்கள் ஈடுபட்டனர்.

இந்த உண்டியல் காணிக்கையில் மொத்தம் ரூ.3 கோடியே 95 லட்சத்து 64 ஆயிரத்து 510 கிடைத்துள்ளது. அதேபோல் 803 கிராம் தங்கமும், 17 கிலோ 765 கிராம் வெள்ளியும், 944 வெளிநாட்டு கரன்சிகளும் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தி இருந்தனர்.

## திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு

PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
- Location: (Nr Mylapore Jn)
- Direction: N/ Face
- Total Area: 2400 sft
- Price: RS.650/sft

LIMITED PLOTS AVAILABLE!

Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner
www.vgpdevelopers.com

## டீலர்கள் தேவை
## மைலேஜ் பூஸ்டர்
## 20% ~ 30%

மிக அதிகமான மைலேஜ் குறைந்த புகை சுலபமான வாகன ஓட்டம் குறையும் மாசு
நேரடி விற்பனையாளர்களும் டீலராகலாம்
Manufactured By: Dlag Technologies, Chennai 33
போன் 63746 73041

## நிலம் தேவை
தெற்கு சென்னை
திருப்போரூர் to செங்கல்பட்டு ரோடு
1 to 2 ஏக்கர்
தொடர்புக்கு:
Ph. 6384617773

## SUN SHINE PROPERTY
(Property & Developers)
லேயவுட், நிலம் & ஷேரிங் டாக்குமெண்ட்ஸ் தேவை
மனை விற்பனை
• பொன்மார் • சித்தாலப்பாக்கம்
600, 850, 900 sqft
முகவரி: K.K. நகர் சென்னை - 78 | தொடர்புக்கு: PH.9840804617

## Annai Violet Arts & Science College
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)
UG & PG COURSES
ADMISSIONS OPEN
Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388

## WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
- HOUSEKEEPING STAFF (Male & Female)
- MARKETING EXECUTIVE - ELECTRICAL FIELD (Male & Female)
- ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
- ELECTRICAL SUB-CONTRACTOR
- DRIVER

GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!

## சிங்கபெருமாள்கோயில்
S.P கோயில். On. GST Road
2 ஏக்கர் விற்பனை
1 ஏக்கர் 25cr
வண்டலூர்
கேளம்பாக்கம் ரோடு
17 ஏக்கர் விற்பனை
1 acre 16 cr
Ph. 9566055082

## EMI 50%
50% OFFER
PLOT FOR SALE
SITE NO: 2
SITE NAME: ஸ்ரீ நகர்
LOCATION: கருங்குழி, மேலாவளம்பேட்டை

SRI DEVELOPERS
LOCATION: ADAMBAKKAM, GUINDY.
OUR PROJECTS
SITE NAME: BHARATHI NAGAR
LOCATION: MULLI, MADHURANTHAGAM.

CONTACT US NOW FOR BOOKING!
PH. NO: 8220711499, 8870158259

## முருகன் துணை
## A.S.R ரியல் எஸ்டேட்
காஞ்சிபுரம்
சுலப தவணை உள்ள வீட்டு மனைகள் வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல் பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள் மற்றும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும்
அணுகவும்
7305025591, 9578622711

## GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும் சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE ரூபாய் ₹1.80 லட்சம்
800 SQFT
FREE FREE!!! 10 கிராம் GOLD COIN சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118

## PLOTS FOR SALE
## SRI DEVELOPERS
மனைகள் விற்பனைக்கு
கிண்டி
மதுராந்தகம், கருங்குழி, ஒரகடம், படப்பை
EMI Available
BANK LOAN Available
CONTACT: 8220711499, 8870158259

## ePAPER PUBLISHING
WEBSITE / SOFTWARE
Publish | Manage | Deliver
Complete Solution for ePaper Publishing
- Daily ePaper
- Archive Management
- Subscription & Free Access
- Google Ads Integration
- Upload PDF & Publish
- Mark, Crop, Cut & Share
- Share on Social Media

COMPLETE ePAPER WEBSITE / SOFTWARE FOR JUST ₹2999/- PER YEAR
HOSTING Included | ADMIN PANEL Included | MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
CALL / WHATSAPP: 9040463899

## JUST Xth PASS
## JOB OPPORTUNITY
₹ 25,000/- PER MONTH *
All Taluks & Districts in ALL STATES in INDIA
- FRESHERS CAN APPLY
- ATTRACTIVE SALARY
- GROWTH OPPORTUNITIES
- SECURE YOUR FUTURE

APPLY NOW!
Call / WhatsApp: 8122664699
*Terms & Conditions Apply

## அகிலாண்டேஸ்வரி நகரில் வீட்டு மனைகள் உள்ளது
மனை அளவு = 30x40 = 1200 ச.அடி
மனை விலை 1,20,000/- மட்டும்
Cell :7305025591
இடம் : பத்தமடை உள்ளது திருநெல்வேலி மாவட்டம்
LOCATION

## நிலம் தேவை
தெற்கு சென்னை
சென்னை
திருப்போரூர் 1 - 2 ஏக்கர்
செங்கல்பட்டு
திருப்போரூர்-செங்கல்பட்டு ரோடு
உடனடி தேவை!
தொடர்புக்கு
Ph: 6384617773

## ₹ 15000 - 21000 | Monthly
Full Time Job Apply, Fresh or Experienced,
100% Job Available Here. No registration fee, Direct Job,
Chennai, Tamilnadu,
- 12th to Graduate and Diploma/ITI Qualified and Other Degree Holders.
- Back Office,
- Data Entry,
- Tele Caller's,
- Field officer,
- Team management, Male/Female Both Can Apply,

Share Your Resume with Photo to
77899 41009

## ADVERTISE WITH US
7789941009

## WANTED
Work From Home Opportunity
Telecallers Required
Also Hiring for IT Jobs
- ✓ Salary: ₹10,000 - ₹15,000
- ✓ Attractive Incentives
- ✓ Flexible Work From Home Option

Freshers & Experienced Both Can Apply
Contact Now:
9566072935

## D.சக்திவேல்
உங்களின் ஒன்மையான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962

## PLOT FOR SALE
பொன்னேரி, திருவள்ளூர், கடம்பத்தூர் அருகில்
வீட்டு மனைகள் விற்பனைக்கு
BANK LOAN AVAILABLE
Contact: 9841495210

## WANTED
- LAB HELPER
- OFFICE BOY
- GARDENER

CHEMBARAMBAKKAM
CALL US 7550093245 / 7358696451

## திருமுடிவாக்கம்
அருகாமையில் அமைந்துள்ள சாரதா கம்பெனிக்கு
## ஆட்கள் தேவை
ஆண்கள் மட்டும்
வயது: 18 முதல் 35 வரை
கல்வி தகுதி
10 முதல் any Degree
தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI , PF , Attendance Allowance போன்ற அனைத்து வசதிகளும் உண்டு
சம்பளம் :
18,000 முதல் 22,000 /-
தொடர்புக்கு :
9962400330 , 9962400319 , 9962400336
மெயில் : hrsarathagroup@gmail.com

## WANTED
ELECTRICIAN SUPERVISOR / ELECTRICIAN
EGMORE, MOUNT ROAD
CALL US 7550093245 / 7358696451

## MATRIMONY WEBSITE/SOFTWARE
VIVAH | SHAADI | PELLI | KALYANAM
Find Your Perfect Life Partner
Trusted by Thousands, Chosen for a Lifetime
COMPLETE MATRIMONY WEBSITE FOR JUST ₹2999/- PER YEAR
HOSTING Included | ADMIN PANEL Included | MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
GET YOUR PROFESSIONAL MATRIMONY WEBSITE TODAY!
BEST PRICE BEST SOLUTION
CALL US 9040463899
WEBSITE www.matrimonyweb.in

## WANTED
OFFICE BOY
GUINDY
CALL US 7550093245 / 7358696451

## WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872

# கவிதை அரங்கம்!





காதலில் தோற்பது என்பது
பிரிவல்ல, ஒருவரை
நினைத்து வாழ்நாள்
முழுவதும் வாழ்வது.

நீ ஒரு நதி என்றால், நான்
உன்னோடு சங்கமிக்கும்
கடல்.

உன் வார்த்தைகள்
ஒவ்வொன்றும் எனக்குப்
புது தெம்பைத்
தருகின்றன.

உன்னை நினைக்கும்
போது மட்டும் தான் என்
இதயம் உண்மையாகத்
துடிக்கிறது.

காலங்கள் மாறலாம்,
காட்சிகள் மாறலாம்,
ஆனால் உன் மீதான என்
காதல் மாறாது.

# வாழ்க்கை தத்துவம்...



பணத்தால் பொருளை வாங்கலாம், நிம்மதியை வாங்க முடியாது.

வாழ்க்கை நெறிகள்
உண்மை பேசுவது கடினம், ஆனால் அது தரும் நிம்மதி அலாதியானது.

நீ எதை விதைக்கிறாயோ அதையே அறுவடை செய்வாய்.

பிறர் துன்பத்தை உன் துன்பமாகக் கருது.

இன்று என்பது உனக்குக் கிடைத்த ஒரு பரிசு.

வாழ்க்கை ஒரு வட்டம்; மேலே இருப்பவன் கீழே வருவான், கீழே இருப்பவன் மேலே போவான்.

# கறைகள்

கூத்தாண்டவர் கோயில் பின்புறம் உள்ள ஒரு லாண்டரி கடையின் முன் கார் நின்றது. நானும் தமிழ் சாரும் காரிலிருந்து இறங்கிச் சென்றோம். அவர் இரண்டு மூன்று செட் வேஷ்டி சட்டைகளைத் துவைக்கக் கொண்டு வந்திருந்தார்.

"எப்பங்க கிடைக்கும்?" - கடைக்காரரிடம் தமிழ் சார் கேட்டார்.

"ஒரு வாரம் ஆகும் சார்."

"எதுக்குங்க இவ்வளவு நாள்?"

"துணி நிறைய ஆர்டர் இருக்கு சார், அதான்."

"துணியில் எந்தக் கறையாக இருந்தாலும் எடுத்து விடுவீர்களா?" என்று நான் குறுக்கிட்டுக் கேட்டேன். அவர் "ஆமாம்" என்பது போலத் தலையாட்டினார்.

"அப்பா இல்லையாப்பா?" என்று தமிழ் சார் கேட்க, "கொஞ்சம் வெளியில போயிருக்கார்" எனச் சட்டெனப் பதில் சொன்னான் அந்த இளைஞன். அங்கிருந்து கிளம்பி காருக்குள் ஏறிக்கொண்டோம். மறக்காமல் சீட் பெல்ட் அணிந்து பயணத்தைத் தொடர்ந்தோம். கார் சிங்காநல்லூர் பேருந்து நிலையம் வழியாகச் சென்று, டிமார்ட் அருகில் உள்ள இடதுபுறச் சாலையில் வளைந்து சென்றது. ஏசியைச் சற்றுச் சரிசெய்து, குளிர்காற்று என் முகத்தில் படுமாறு அட்ஜஸ்ட் செய்தேன். உப்பிலிபாளையம் வழியாக வரும்போது கடும் போக்குவரத்து நெரிசல். மாரியம்மன் கோயில் திருவிழா என்பதால், சாலையில் வண்டிகளை நிறுத்தித் தடுத்து வைத்திருந்தனர். வலதுபுறமாகச் சென்ற வாகனங்களைப் பின்பற்றி நாங்களும் சென்றோம். சிறிது தூரத்தில் அந்த மாரியம்மன் கோயில் அருகில் வேறொரு சாலையில் கார் நின்றது.

தமிழ் சார், "சிவா, வாங்க இஞ்சி டீ குடித்துவிட்டுப் போகலாம்" என்றார்.

"சார், வேண்டாம் சார். கிட்னி ஸ்டோன் வந்ததிலிருந்து டீ, காபி எல்லாம் குடிக்கக் கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்காரு. சரி வாங்க, எப்பவாவது ஒருமுறை குடிக்கலாம், தப்பில்லை" என்று கூறி நானும் இறங்கினேன்.

ஹோப் காலேஜ் சிக்னல் அருகில் இடதுபுறமாக அந்த டீக்கடை இருந்தது. 'மகாதேவ்' என்று ஹிந்தியில் பெயர் பலகை வைக்கப்பட்டிருந்தது.

"பையா, ரெண்டு டீ... அதுல ஒண்ணு சர்க்கரை கம்மி" என ஆர்டர் கொடுத்தார் தமிழ் சார்.

"அச்சா சார்!" என்றான் கடைக்காரன்.

"ஒரு காலத்துல டீ கடைன்னாலே நாயர் கடைதான். இப்ப இந்திக்காரங்க இஞ்சி டீங்கிற பேர்ல கோவை மாவட்டம் பூரா கடை போட்டிருக்காங்க. ஒரே நாடு ஒரே தேர்தல் இவங்களுக்குத்தான் போல," என நான் பேச்சைத் தொடங்கினேன்.

"ஏற்கனவே ஒரிசா, பீகார் காரங்க இங்க வந்து கார்மெண்ட்ஸ், கன்ஸ்ட்ரக்ஷன், பவுண்டரின்னு நிறைஞ்சிட்டாங்க. இவங்க ராஜஸ்தான்காரங்க, இவங்க பங்குக்கு டீ விக்கிறாங்க. இன்னும் யாரெல்லாம் வரப்போறாங்களோ?" என்றேன்.

அதற்குத் தமிழ் சார், "வரட்டும் சிவா. இவங்க இல்லன்னா திருப்பூர் கிடையாது தெரியுமா? வேலைவாய்ப்புக்குத் தமிழ்நாட்டுல ஆளே கிடைக்கிறது இல்லை. அவ்வளவு ஏன், நம்ம பொழப்பு என்ன ஆகும்னு யோசிங்க? நம்மகிட்டயே ஒடிசா, பீகார், அசாம் காரங்கதான் அதிகம். இந்திக்காரங்க இல்லைன்னா நீங்க எப்படி செக்யூரிட்டிக்கு ஆள் பிடிப்பீங்க?" என்றார்.

"அது சரிதான் சார். நம்ம ஊர்க்காரங்க இந்த செக்யூரிட்டி வேலைன்னா ஓடுறாங்க. இவங்கதான் குறைவான கூலிக்கு அந்த வேலையைச் செய்றாங்க," என்று பேசிக்கொண்டிருந்தோம். நாங்கள் இருவரும் வெள்ளைச் சட்டை, கருப்பு பேண்ட் அணிந்திருந்தோம். சிறிது நேரத்தில் அந்த ஹிந்திக்காரர் இஞ்சியைத் தட்டிப் போட்டு, நன்கு கொதிக்க வைத்த டீயைக் கண்ணாடி டம்ளரில் ஊற்றிக் கொடுத்தார்.

நாங்கள் பேசிக்கொண்டே டீ குடிக்கத் தயாரான போது, அருகில் நின்றிருந்த ஒரு கல்லூரி மாணவன், கவனிக்காமல் திரும்பியபோது அவனது இடது தோள்பட்டை என் வலது கையைத் தட்டியது. கையில் இருந்த டீ என் சட்டையில் சிந்திவிட்டது. சுருக்கென்று கோபத்தில், "பார்த்துத் திரும்ப மாட்டியா? கண்ணு என்ன பொரடியிலயா இருக்கு?" எனக் கத்தினேன்.

பதறிப்போய், "சார் ஆக்சிடென்ட்! காரை நிறுத்துங்க!" என்று கத்திவிட்டு, கதவைத் திறந்து ஓடினேன்.

ஒரு சிறுவன் கீழே விழுந்து வலியால் அழுது கொண்டிருந்தான். அவன் அருகே ஒரு ஸ்கூட்டி விழுந்து கிடந்தது. அதை ஓட்டி வந்தவர் 35 வயது மதிக்கத்தக்க, காவி உடையணிந்த ஒரு நபர். கழுத்தில் ருத்ராட்ச மாலைகள் அணிந்திருந்ததைப் பார்த்தபோது அவர் ஒரு ஓதுவார் என்று தெரிந்தது. அவர் குழந்தையைத் தூக்காமல், தன் தோளில் இருந்த பைக்குள் எதையோ தேடிக்கொண்டிருந்தார்.

டிவிஎச் அபார்ட்மெண்ட் செக்யூரிட்டிகள் இருவரும் அங்கு ஓடி வந்தனர். நான் அந்தக் குழந்தையை அப்படியே என் மார்போடு அணைத்துத் தூக்கி ஓரமாக அமர வைத்தேன். அக்கம் பக்கத்தில் ஆட்கள் கூடத் தொடங்கினர். அந்த நபரைப் பார்த்து, "என்னங்க ஆச்சு? இது உங்க மகனா?" என்று கேட்டேன்.

"இல்லைங்க... பையன் குறுக்கே வந்து விழுந்துட்டான்," என்றார் பதற்றத்துடன்.

"ஐயா, உனக்கு அறிவு இருக்கா? உன் மகனா இருந்தா இப்படி வேடிக்கை பார்த்துட்டு இருப்பியா? பையன் சின்னப் பையன், நீ கவனிச்சிருக்கணும்ல? அதை விட்டுட்டுப் பேக்ல என்ன தேடுற?"

"இல்ல... என்னோட கிரெடிட் கார்டு இருக்கான்னு பார்த்தேன்..."

"உங்களுக்கெல்லாம் கிரெடிட் கார்டும் டெபிட் கார்டும்தான் முக்கியம், ஒரு பையனைக் காப்பாத்துறது முக்கியமில்லை," என்று சாடிவிட்டு, 108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்தேன். ஈஎஸ்ஐ மருத்துவமனை அருகில் வண்டி இருப்பதாகவும், உடனே வருவதாகவும் சொன்னார்கள். உப்பிலிபாளையம் மாரியம்மன் கோயிலுக்கு ஆள் அனுப்பித் தகவல் சொன்னேன். அங்கிருந்து ஒரு கும்பல் ஓடி வந்தது. அவர்கள் மஞ்சள் நீராட்டு விழாவில் இருந்ததால், உடல் முழுவதும் நனைந்து மஞ்சள் வண்ணமாய் உடைகள் மாறியிருந்தன. ஆக்ரோசமாய் திட்டிக்கொண்டே ஓடி வந்தனர். அருகில் வந்ததும் ஒரு சிலர் பேசுகின்றபோது மது வாடை மூக்கைத் துளைத்தது; நாக்கு குழறியது. பேசுவது என்னவென்றே தெரியாமல் பேசினர். அதற்குள் ஆம்புலன்ஸ் வந்துவிட, சிறுவனை ஸ்ட்ரக்சரில் ஏற்றினோம். தலையில் பலத்த காயம் இருப்பதை அலுவலரிடம் சொன்னேன். அப்போது சிறுவனின் தாய் அலறி அடித்துக்கொண்டு ஓடி வந்தாள். "ஐயா, என் பையனுக்கு என்ன ஆச்சு?" என்று கதறியவளைத் தேற்றி, ஆம்புலன்ஸில் ஏற்றி அனுப்பினேன்.

கூட்டம் அந்த ஓதுவாரைச் சூழ்ந்து கொண்டது. "நீயும் வண்டியில ஏறு, ஜி.ஹெச்-ல வந்து பதில் சொல்லு" என மிரட்டினார்கள். அவர் பயம் கலந்த தைரியத்துடன், "பையன்தான் வந்து விழுந்தான், நான் வேணா போலீஸ் ஸ்டேஷன் வர்றேன்" என்றார்.

"யோவ், ஓவரா பேசாதே. நான் தூரத்துல இருந்து கவனிச்சுட்டுதான் வந்தேன். பையன் அடிபட்டு விழுந்து கிடக்கும்போது, நீ உன் கிரெடிட் கார்டைத் தேடிக்கிட்டு இருந்த" என்று நான் ஆத்திரப்பட்டேன்.

"கோயில்ல பூஜை இருக்கு, நான் போகணும்" என்றார் அவர்.

"குழந்தையும் தெய்வமும் ஒண்ணுன்னு சொல்லுவாங்க. ஒரு குழந்தையை இடிச்சுத் தள்ளிட்டு நீ பூஜை செஞ்சா, அந்த ஆண்டவன் அருள் உனக்குக் கிடைக்குமா?" எனக் கேட்டேன்.

இறுதியில் அவர் ஜி.ஹெச் செல்வதாக ஒப்புக்கொண்டார். கூட்டம் கலைந்தது. தமிழ் சாரும் நானும் அலுவலகம் சென்றோம். அந்தப் பையனைத் தூக்கி மார்போடு அணைத்தபோது ஏற்பட்ட கறை அது. மனதில் நினைத்துக் கொண்டேன்... "சின்னக் கறைக்காக என் மனைவியையும், அந்த மாணவனையும் திட்டித் தீர்த்தேன். ஆனால், ஒரு நல்ல காரியத்திற்காக ஏற்பட்ட இந்த ரத்தக் கறை எனக்கு வருத்தத்தையோ கோபத்தையோ தரவில்லை."

**எல்.ஜி. சிவக்குமார்**
ராமநாதபுரம்

# சிரிப்பு வருது..! சிரிப்பு வருது..!!



வாழ்க்கைங்கிறது ஒரு 'ஐஸ் கிரீம்' மாதிரி...
சாப்பிட்டாலும் கரையும்,
சாப்பிடலனாலும் கரையும்!
ஆனா... அது 'வெண்ணிலா'வா இல்ல 'சாக்லேட்'டாங்கிறது தான் முக்கியம்!



# தினம் ஒரு சமையல்



## செட்டிநாடு பூண்டு குழம்பு

தேவையான பொருட்கள்:


சின்ன வெங்காயம் - 15
பூண்டு - 20 பற்கள்
புளி - ஒரு எலுமிச்சை அளவு (கரைத்தது)
நல்லெண்ணெய் - 3 டேபிள் ஸ்பூன்
குழம்பு மிளகாய்த்தூள் - 2 ஸ்பூன்
வெந்தயம், கடுகு - தாளிக்க

செய்முறை:

வாணலியில் நல்லெண்ணெய் ஊற்றி கடுகு, வெந்தயம், கருவேப்பிலை தாளிக்கவும்.
முதலில் பூண்டு சேர்த்து லேசாக வதங்கியதும், சின்ன வெங்காயம் சேர்த்து பொன்னிறமாகும் வரை வதக்கவும்.
தக்காளி ஒன்று சேர்த்து மசிய வதங்கிய பின், மிளகாய்த்தூள் மற்றும் உப்பு சேர்க்கவும்.
புளிக்கரைசலை ஊற்றி, குழம்பு ஓரங்களில் எண்ணெய் பிரிந்து வரும் வரை நன்கு கொதிக்க விடவும்.
இறுதியில் ஒரு துண்டு வெல்லம் சேர்த்து இறக்கினால் சுவை இன்னும் கூடும்.



# இலவம் பயன்கள்



இலவம் மரம் (SILK COTTON TREE) அதன் மருத்துவ குணங்களுக்காகவும், வணிக ரீதியிலான பயன்பாட்டிற்காகவும் "கற்பக விருட்சத்திற்கு" இணையான ஒன்றாகக் கருதப்படுகிறது. இதன் இலை, பூ, பட்டை, பிசின் மற்றும் வேர் என அனைத்து பாகங்களும் பயன் தரக்கூடியவை.

இலவம் மரத்தின் முக்கிய பயன்கள் இதோ:
1. இயற்கை மெத்தை மற்றும் தலையணைகள்
இலவம் பஞ்சு (KAPOK) மற்ற செயற்கை பஞ்சுகளை விட சிறந்தது.
குளிர்ச்சி: கோடை காலத்தில் உடல் சூட்டைத் தணிக்கும்.
ஆரோக்கியம்: கழுத்து வலி மற்றும் முதுகு வலி வராமல் தடுக்க இலவம் பஞ்சு தலையணைகள் பரிந்துரைக்கப்படுகின்றன. இது பூச்சிகள் அல்லது அலர்ஜியை ஏற்படுத்தாது.
2. மருத்துவப் பயன்கள்
சித்த மருத்துவத்தில் இலவம் முக்கிய இடம்பிடிக்கிறது:
உடல் சூடு தணிய: இலவம் பிசினைப் பொடி செய்து பாலில் கலந்து குடித்து வந்தால் உடல் சூடு குறையும், உடல் வலிமை பெறும்.
சீதபேதி மற்றும் வயிற்றுப்போக்கு: இலவம் மரத்தின் பட்டையை கஷாயம் வைத்து குடித்தால் நாள்பட்ட வயிற்றுப்போக்கு குணமாகும்.
முகப்பரு நீங்க: இலவம் முட்களைச் சேகரித்து, அதைச் சந்தனம் போல அரைத்து முகப்பருக்கள் மீது தடவினால் பருக்கள் மறைந்து தழும்புகள் நீங்கும்.
பற்களின் உறுதிக்கு: இதன் குச்சிகளைப் பல் துலக்கப் பயன்படுத்தினால் ஈறுகள் பலப்படும்.
3. விதைகளின் பயன்கள்
இலவம் விதைகளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் சோப்புத் தயாரிப்பிலும், விளக்கு எரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.
விதைகளை அரைத்து கால்நடைகளுக்குத் தீவனமாகக் கொடுக்கும்போது அவை அதிகச் சத்து பெறுகின்றன.
4. மரத்தின் பயன்கள்
இலவம் மரம் மிகவும் லேசானது என்பதால், தீப்பெட்டித் தொழில், கட்டுமரங்கள் மற்றும் பொம்மைகள் செய்யப் பயன்படுத்தப்படுகிறது.
இந்த மரம் அதிக காற்றைச் சுத்திகரிக்கும் தன்மை கொண்டது.

# முதல்வராவேன் என்பதை அன்றே கணித்தாரா விஜய்.? நடிகர் தாமு பகிர்ந்த சுவாரஸ்யமான தகவல்கள்..



நடிகர் தாமு சமீபத்தில் பகிர்ந்த கருத்துகள், விஜய்யின் அரசியல் பயணம் குறித்து புதிய விவாதங்களை கிளப்பியுள்ளது. "நாளை தீர்ப்பு" திரைப்பட காலத்திலேயே விஜய் சமூக பொறுப்பைப் பற்றி அதிகமாக சிந்தித்தவர் என்று தாமு குறிப்பிட்டுள்ளார்.

அந்த படம் முடிந்தபின், பெண்களுக்கு அரிசி, சர்க்கரை உள்ளிட்ட மளிகை பொருட்களை வழங்கியதையும் அவர் நினைவுகூர்ந்தார். மக்கள் நலனில் ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் விஜய்க்கு ஆரம்பத்திலேயே இருந்ததாகவும், முதல்வராக வேண்டும் என்ற ஆசையை கூட தனிப்பட்ட முறையில் பகிர்ந்ததாகவும் தாமு தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணமே பின்னர் விஜய் மக்கள் இயக்கம் மூலம் பல சமூக சேவைகள் செய்வதற்கு வழிவகுத்தது. கல்வி உதவி, நிவாரணப் பணிகள், மற்றும் பல்வேறு நலத்திட்டங்கள் வழியாக விஜய் தனது ரசிகர் வட்டத்தை சமூக இயக்கமாக மாற்றியமைத்தார். தற்போது அவர் தவெக கட்சி மூலம் அரசியல் அரங்கில் அதிகாரபூர்வமாக களம் இறங்கியுள்ளார்.

சமீபத்தில் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் மே 4ஆம் தேதி வெளியாக உள்ள நிலையில், விஜயின் அரசியல் எதிர்காலம் குறித்த எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இந்நிலையில், தாமுவின் இந்த வெளிப்படையான கருத்துக்கள், விஜயின் அரசியல் பயணம் ஒரு திடீர் முடிவு அல்ல, நீண்ட கால திட்டமிடலின் விளைவாகும் என்பதை சுட்டிக்காட்டுகின்றன.



சினிமா

நடிகை ராசி கண்ணா தற்போது Lukkhe என்ற வெப் சீரிஸில் நடித்து இருக்கிறார். அதன் ட்ரெய்லர் வெளியீட்டு விழா சமீபத்தில் நடந்தது.

அதற்கு பச்சை நிறத்தில் ட்ரெண்டியான ஹாட் உடையில் அவர் வந்திருந்தார். அந்த உடையில் அவர் எடுத்திருக்கும் போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.

# செட்டில் நடந்த சூர்யாபூஜா CHEMISTRY-ஐப் பார்த்தீங்களா? UNSEEN புகைப்படங்கள் வைரல்!



நடிகர் சூர்யா தனது 44-வது திரைப்படமாக "ரெட்ரோ" படத்தில் நடித்திருந்தார். இந்த படத்தை பிரபல இயக்குநர் கார்த்திக் சுப்பராஜ் இயக்கியிருந்தார். கதாநாயகியாக பூஜா ஹெக்டே நடித்த இந்த திரைப்படம் கடந்த ஆண்டு வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. படத்தின் தனித்துவமான கதை சொல்லும் முறை மற்றும் ஸ்டைலிஷ் காட்சிகள் ரசிகர்களை கவர்ந்தன.

இந்நிலையில், "ரெட்ரோ" திரைப்படத்தின் படப்பிடிப்பு தளத்தில் எடுக்கப்பட்ட சில நினைவுப்புகைப்படங்களை பூஜா ஹெக்டே தனது சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளார்.


இந்த புகைப்படங்களில் படக்குழுவினருடன் இணைந்து எடுத்த மகிழ்ச்சியான தருணங்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக சூர்யாவுடன் இணைந்து எடுத்த CANDID புகைப்படங்கள் ரசிகர்களின் கவனத்தை அதிகமாக ஈர்த்துள்ளன.

இந்த புகைப்படங்கள் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகின்றன. ரசிகர்கள் பலரும் கமெண்ட்களில் படத்தை மீண்டும் நினைவுகூர்ந்து பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர். மேலும், படப்பிடிப்பு அனுபவங்கள் குறித்து பூஜா பகிர்ந்துள்ள குறிப்புகளும் ரசிகர்களுக்கு சுவாரஸ்யமாக உள்ளது. இப்படியான நினைவுகள், படத்தின் மீது ரசிகர்களின் ஈர்ப்பை மீண்டும் அதிகரிக்கச் செய்துள்ளன.


ULTRA SEC FACILITY FORCE
YOUR SAFETY, OUR COMMITMENT
OUR SERVICES
Security Services
(Trained Security Guards, Supervisors, 24x7 Coverage)
Facility Management Services
(Housekeeping, Maintenance, Cleaning)
Manpower Supply
(Skilled & Unskilled Stafffor Industries, Apartments, Offices
WHY CHOOSE US?
Experienced & Professional Team
24/7 Reliable Support
Affordable & Transparent Pricing
Customized Service Plans
ULTRA SEC FACILITY FORCE
Flat No : 13A, Door No: 1,
Moovarasampet Main Road,
Madipakkam, Chennai-600091.
+91 93632 98980
ultrasecfacility@gmail.com
www.ultrasecfacility.com


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


ePAPER
ePAPER PUBLISHING
WEBSITE / SOFTWARE
Publish | Manage | Deliver
Complete Solution for ePaper Publishing
Daily ePaper
Archive Management
Subscription & Free Access
Google Ads Integration
Upload PDF & Publish
Mark, Crop, Cut & Share
Share on Social Media
COMPLETE ePAPER WEBSITE / SOFTWARE
FOR JUST
₹2999/-
PER YEAR
UPLOAD, MARK, CROP, CUT & SHARE
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
CALL / WHATSAPP:
9040463899


ADVERTISE
WITH US
7789941009


TOURS & TRAVELS AGENCY
WEBSITE / SOFTWARE
BOOK | MANAGE | GROW
All-in-One Solution to Grow Your Travel Business Online
COMPLETE TOURS & TRAVELS AGENCY WEBSITE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
PROFESSIONAL DESIGN
EASY TO MANAGE
SECURE & RELIABLE
GROW YOUR BUSINESS
CALL / WHATSAPP:
9040463899


REAL ESTATE AGENT
WEBSITE / SOFTWARE
LIST | SHOWCASE | CONNECT | GROW
Everything You Need to Grow Your Real Estate Business Online
COMPLETE REAL ESTATE WEBSITE / SOFTWARE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
PROFESSIONAL DESIGN
EASY TO MANAGE
SECURE & RELIABLE
BOOST YOUR BUSINESS
CALL / WHATSAPP
9040463899


CRYPTO BASED
MLM WEBSITES
PROFESSIONAL • SECURE • POWERFUL
FOR
Rs. 25000/-
ONLY
ANY MLM CRYPTO PLAN
Decentralised
ROI Plans
Helping Plans
Level Plans
Binary Plans
Compensation Plans
Generation Plans
and Many More...
CRYPTO MLM
SECURE & RELIABLE
DECENTRALISED PLATFORM
GROW YOUR BUSINESS
FREE SUPPORT & UPDATES
Call/Whatsapp:
7436914247


JOB PLACEMENT AGENCY
WEBSITE / SOFTWARE
CONNECTING TALENT, CREATING OPPORTUNITIES
COMPLETE JOB PLACEMENT AGENCY WEBSITE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
PROFESSIONAL DESIGN
EASY TO MANAGE
SECURE & RELIABLE
GROW YOUR BUSINESS
CALL / WHATSAPP
9040463899


LIVE
NEWS PORTAL
WEBSITE / SOFTWARE
FAST | RELIABLE | DYNAMIC
Powerful Solution for Digital News & Media Business
COMPLETE NEWS PORTAL WEBSITE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
PROFESSIONAL DESIGN
EASY TO MANAGE
SECURE & RELIABLE
GROW YOUR AUDIENCE
CALL / WHATSAPP:
9040463899


WANTED
ELECTRICIAN SUPERVISOR
/
ELECTRICIAN
EGMORE, MOUNT ROAD
CALL US
7550093245 / 7358696451


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599

# விலைவாசி உயர்வின் நாயகன் மோடி : காங்கிரஸ் கடும் விமர்சனம்

**புதுடெல்லி, மே 2:**

சர்வதேசசந்தையில்கச்சா எண்ணெய் விலை மற்றும் அமெரிக்கடாலருக்குநிகரான இந்திய ரூபாயின் மதிப்பு உள்ளிட்ட காரணிகளின் அடிப்படையில் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் கியாஸ் சிலிண்டர்களின் விலைகளை எண்ணெய் நிறுவனங்கள் நிர்ணயம் செய்து வருகின்றன. இதில் சமையல் கியாஸ் சிலிண்டர்களின் விலையை மாதத்தின் முதல் தேதியில் மாற்றிஅமைத்துவருகின்றன.

இதனிடையே, மாதத்தின் முதல்நாளானநாடுமுழுவதும் கியாஸ்சிலிண்டர் விலையை எண்ணெய் நிறுவனங்கள் உயர்த்தியுள்ளன. அதன்படி, சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வர்த்தக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலைரூ.993 உயர்த்தப்பட்டு ரூ. 3 ஆயிரத்து 237-க்கு விற்பனை செய்யப்படுகிறது. நாடு முழுவதும் வணிக பயன்பாட்டிற்கான கியாஸ் சிலிண்டர் விலை ரூ. 993 உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், வணிகர்கள்பெரும் அதிர்ச்சியடைந்துள்ளனர். இந்த விலை உயர்வு நுகர்வோருக்கு (வாடிக்கையாளர்கள்) நேரடி பாதிப்பை ஏற்படுத்த உள்ளது. இந்நிலையில், கியாஸ் சிலிண்டர் விலை உயர்த்தப்பட்டுள்ளநிலையில் மோடி விலை உயர்வின் நாயகன் என்று காங்கிரஸ் விமர்சனம் செய்துள்ளது. இது தொடர்பாக காங்கிரஸ் வெளியிட்ட எக்ஸ் பதிவில், விலை உயர்வின் நாயகன் மீண்டும் சாட்டையால் அடித்துள்ளார். இன்று வணிக பயன்பாட்டிற்கான கியாஸ் சிலிண்டர் விலையை மேலும் ரூ. 993 உயர்ந்துள்ளார். கடந்த 4 மாதங்களில் வணிக பயன்பாட்டிற்கான கியாஸ் சிலிண்டர்விலைரூ.1ஆயிரத்து 518 உயர்த்த ப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் இன்னும் 8 மாதங்கள் உள்ளன.

இவ்வாறுபதிவிட்டுள்ளது.

# உண்மையான ஐயப்ப பெண் பக்தர்கள் 10 முதல் 50 வயது வரை சபரிமலைக்கு செல்வதில்லை: உச்ச நீதிமன்றம் கருத்து

**புதுடெல்லி, மே 2:**

உண்மையான ஐயப்ப பெண் பக்தர்கள் 10 முதல் 50 வயது வரை சபரிமலைக்கு செல்வதில்லை என்று உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.



சபரிமலையில் அனைத்து வயது பெண்களையும் வழிபட அனுமதித்த தீர்ப்புக்கு எதிரான மறு ஆய்வு மனுக்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதிகள் பி.வி நாக ரத்தினா, எம் எம் சுந்தரேஷ், ஏ.அமானுல்லா, ஏ ஜி மசி, பிபி வர்லே, ஆர் மகாதேவன், ஜோய் மால்யா பக்ஷி ஆகியோரை கொண்ட ஒன்பது நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு விசாரித்து வருகிறது.

இந்த விசாரணையின் போது, கடவுள் நம்பிக்கையற்றவர்கள், கோயிலில் விதிக்கப்பட்டுள்ள மத ரீதியான கட்டுப்பாடுகளை எதிர்த்து வழக்கு தொடர முடியுமா ? பெரும்பான்மையான நம்பிக்கையாளர்களின் நம்பிக்கை புண்படலாமா ? என்று நீதிபதிகள் கேட்டனர்.

தீர்ப்புக்கு ஆதரவாகவும், தீர்ப்புக்கு பிறகு சபரிமலைக்கு சென்று எதிர்ப்புகளை சந்தித்த கனக துர்கா, பிந்து அம்மினி சார்பிலும் மூத்த வழக்குரைஞர் இந்திரா ஜெய்சிங் வாதிடுகையில், "நம்பிக்கை உள்ளதோ, இல்லையோ ஆனால் கோயிலுக்கு செல்லும் போது மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும். சட்ட ரீதியான உரிமையை இந்த இருவரும் மீறவில்லை. சட்ட ரீதியான உரிமையை மீட்கவே போராட வேண்டி உள்ளது" என்று வாதிட்டார்.

அப்போது நீதிபதி எம்.எம். சுந்தரேஷ், "உங்கள் வாதத்தை ஏற்றுக்கொண்டால் ஒவ்வொரு நம்பிக்கையாளரும் இப்படி தான் வழிபாடு இருக்க வேண்டும் என சொல்ல தொடங்குவார்கள். அதற்கு முடிவே இல்லாமல் போகும்" என்று குறிப்பிட்டார்.

மூத்த வழக்கறிஞர் இந்திரா ஜெய்சிங், "10 முதல் 50 வயது வரையிலான பெண்கள் மிகவும் ஆக்கத்துடனும், ஊக்கத்துடனும் இருக்கின்றனர் இந்த வயதுடைய பெண்களுக்கு சபரிமலையில் அனுமதி மறுக்கப்படுவது வழிபாட்டு உரிமை என்ற அடிப்படை உரிமையை மறுப்பதாகும். சபரிமலை தீர்ப்புக்குப் பிறகு இரு பெண்களும் சபரிமலைக்கு சென்று திரும்பியபோது கோயிலை தூய்மைப்படுத்த வேண்டும் என்று சிலர் பேசினார்கள்.

ஒவ்வொரு மதத்திற்கும் தன்னகத்தே சீர்திருத்தம் செய்து கொள்ளும் பண்புகள் உள்ளன" என வாதிட்ட போது, நீதிபதி பிவி நாகரத்தினா, "கடவுள் நம்பிக்கையற்ற வட இந்தியர் எப்படி வழிபாட்டு உரிமையை கோர முடியும்? வேற்றுமையில் ஒற்றுமையாக இருப்பது தான் நமது நாட்டின் பலம். 10 முதல் 50 வரையிலுள்ள உண்மையான ஐயப்ப பெண் பக்தர்கள் சபரிமலைக்கு செல்வதில்லை" என்று குறிப்பிட்டார். அடுத்த விசாரணை மே 5ம் தேதியும் தொடர்கிறது.

# இஸ்ரோ தற்காலிக தொழிலாளரை பணி நிரந்தரம் செய்ய உத்தரவு

**புதுடெல்லி, மே 2:**


மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோவின் திரவ உந்து அமைப்புகள் மையத்தில் பொருள்களை ஏற்றி இறக்கும் தினக்கூலிகளாக 1991-1997 காலக் கட்டத்தில் சேர்ந்து சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக ஆர். ஐயப்பன், பி. ஆறுமுகன், ஆர். சண்முக ரவி, வி. ராஜேஷ் குமார், எஸ். சுயம்பு, ரவிதுரை, எஸ்.எம். நீல ராமன் உள்ளிட்டோர் பணியாற்றி வந்தனர். இதனிடையே, தற்காலிக தொழிலாளர்களை நிரந்தப்படுத்தும் திட்டத்தை உருவாக்க மத்திய பணியாளர் தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவைச் சென்னை உயர் நீதிமன்றமும் கடந்த 2011-ம் ஆண்டு, உச்சநீதிமன்றமும் உறுதி செய்தது.

ஆனால் மத்திய அரசு, தொழிலாளர்களை நிரந்தப்படுத்தும் திட்டத்தை உருவாக்குவதற்கு பதிலாக மீண்டும் தற்காலிக பணியை உருவாக்கியது. இத்திட்டத்தை எதிர்த்துத் தற்காலிக தொழிலாளர்கள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா அடங்கிய அமர்வு விசாரித்து அளித்துள்ள தீர்ப்பில் கூறியிருப்பதாவது: நாட்டின் முக்கியமான வளர்ச்சியில் மறைமுகமாகப் பங்களிப்பு செய்யும் தொழிலாளர்களைச் சமவுரிமையுடன் முன் மாதிரியான பணி அமர்த்துநராகச் செயல்பட வேண்டிய அரசே பாகுபாட்டுடன் நடத்தக் கூடாது. தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்ற உத்தரவை மத்திய அரசு ஏற்று நடக்கவில்லை.

இந்த மேல்முறையீடு மனுக்கள் ஏற்கப்படுகின்றன. தற்காலிக தொழிலாளர்களைக் கடந்த 2010, செப்டம்பர் 9-ம் தேதி தொடங்கி பின் தேதியிட்டு 4 வாரங்களுக்குள் நிரந்தரமாக்க மத்திய அரசுக்கு உத்தரவிடப்படுகிறது. இத்தீர்ப்பு இஸ்ரோவில் பணியாற்றும் தற்காலிக தொழிலாளர்கள் அனைவருக்கும் பொருந்தும். பொறியாளர்கள், அறிவியலாளர்களின் பங்களிப்பால் மட்டும் இந்திய விண்வெளித் திட்டம் வெற்றி பெறவில்லை. உதவிப் பணியாளர்களின் பங்களிப்பும் இந்த வெற்றியில் உண்டு. பணி அங்கீகார விவகாரத்தில் அத்தகைய பணியாளர்களைப் பாகுபாட்டுடன் நடத்துவதோ, அலட்சியம் காட்டுவதோ, நிலவுக்கும், அதற்கு அப்பாலும் இந்தியாவைக் கொண்டு சென்ற கூட்டு முயற்சி என்னும் பண்பைக் குலைப்பதாகிவிடும். இவ்வாறு தீர்ப்பில் நீதிபதிகள் கூறியுள்ளனர்.

# சாதிவாரி கணக்கெடுப்பை தாமதப்படுத்த முயற்சி: ஜெய்ராம் ரமேஷ்

**புதுடெல்லி, மே 2:**



காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: மக்கள் தொகை கணக்கெடுப்பில் சாதிவாரி கணக்கெடுப்பும் சேர்க்கப்படும் என்று மத்திய அரசு கடந்த ஆண்டு அறிவித்தது. ஆனால் தற்போது பிரதமர் நரேந்திர மோடி 'யு-டர்ன்' அடித்திருக்கிறார்.

கடந்த 2024 ஏப்ரல் 28-ம் தேதி தனியார் தொலைக்காட்சிக்கு பிரதமர் நரேந்திர மோடி அளித்த பேட்டியில், "சாதி வாரி கணக்கெடுப்பு நடத்த காங்கிரஸ் கோரிக்கை விடுப்பது, நக்சல் சிந்தனையின் அறிகுறியாகும்" என்று விமர்சித்தார்.

ஆனால் கடந்த 2025-ம் ஆண்டு ஏப்ரல் 20-ம் தேதி பிரதமர் மோடி வெளியிட்ட அறிவிப்பில் சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பு வெளியாகி ஓராண்டாகிவிட்டது. ஆனால் இது குறித்த வழிகாட்டு நெறிகள் இன்னும் வெளியிடப்படவில்லை. நாடாளுமன்றத்தின் சிறப்பு கூட்டத் தொடர் அண்மையில் நடைபெற்றது.

இதில் சாதிவாரி கணக்கெடுப்பை தாமதப்படுத்தும் பிரதமரின் நோக்கம் மிகத் தெளிவாகப் புரிந்தது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# உ.பி.யில் திருமண ஊர்வல இசைக் கச்சேரியில் அதிக ஓசையால் 140 கோழிகள் உயிரிழப்பு

**புதுடெல்லி, மே 2:**

உ.பி.யில் ஒரு கோழிப் பண்ணையில் 140 கோழிகள் இறந்தது தொடர்பாக இசைக் கச்சேரி நிர்வாகி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கச்சேரியின் அளவுக்கு அதிகமான ஓசையால் கோழிகள் மாரடைப்பால் இறந்ததாக காரணம் கூறப்படுகிறது.

உ.பி.யில் திருமண நிகழ்ச்சியின் மாப்பிள்ளை ஊர்வலத்தில் டிஜே எனும் இசைக் கச்சேரி இடம்பெறுவது வழக்கம். இந்நிலையில் உ.பி.யின் சுல்தான்பூர் மாவட்டம், தரியாபூர் கிராமத்தில் கடந்த ஏப்ரல் 25-ம் தேதி ஒரு திருமண ஊர்வலம் டிஜே கச்சேரியுடன் நடைபெற்றது. அதில் கிளம்பிய அளவுக்கு மீறிய ஓசை அதன் வழியில் உள்ள ஒரு கோழிப் பண்ணையில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

கச்சேரியின் ஓசை தாங்காமல் இங்கு 140 கோழிகள் இறந்தன. இது தொடர்பாக தரியாபூர் காவல் நிலையத்தில் கோழிப்பண்ணை உரிமையாளர் சாபீர் அலி, புகார் அளித்தார்.

இதையடுத்து உயிரிழந்த கோழிகளுக்கான உடற்கூறு ஆய்வு நடத்தப்பட்டது. இதில் டிஜே இரைச்சல் கோழிகளுக்கு பெரும் பீதியை ஏற்படுத்தியதாகவும் இதனால் ஏற்பட்ட மாரடைப்பால் 140 கோழிகள் இறந்ததாகவும் தெரியவந்தது.

# 'நெட்வொர்க்' வரைபடத்தில் பிழை: மன்னிப்பு கேட்டது நேபாள ஏர்லைன்ஸ்

**புதுடெல்லி, ஏப்.2:**

ஒரு நெட்வொர்க் வரைபடத்தில் ஜம்மு காஷ்மீரை பாகிஸ்தானின் ஒரு பகுதியாக காட்டியதற்காக நேபாள ஏர்லைன்ஸ் மன்னிப்பு கோரியுள்ளது.

இதுகுறித்து 'எக்ஸ்' தளத்தில் நேபாள ஏர்லைன்ஸ் வெளியிட்டுள்ள பதிவில், "எங்கள் சமூக ஊடக சேனல்களில் சமீபத்தில் பகிரப்பட்ட நெட்வொர்க் வரைபடத்தில் உள்ள பிழைக்காக நாங்கள் மனப்பூர்வமாக மன்னிப்பு கோருகிறோம். அந்த வரைபடத்தில் சர்வதேச எல்லைகள் தொடர்பான வரைபடவியல் பிழைகள் இருந்தன. அவை நேபாளம் அல்லது நேபாள ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கவில்லை, நாங்கள் உடனடியாக அந்தப் பதிவை நீக்கிவிட்டோம், மேலும் எங்கள் தகவல்கள் மிக உயர்ந்த துல்லிய தரத்துடன் இருப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். அந்தப் பதிவு ஏற்படுத்திய மன வருத்தத்துக்கும் வருந்துகிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மேற்கு வங்க வாக்காளர்கள் கருத்து சொல்ல மறுப்பு: ஆக்சிஸ் மை இந்தியா தகவல்

**புதுடெல்லி, ஏப்.2:**

மற்ற மாநிலங்களின் தேர்தல் கருத்துக் கணிப்புகளை வெளியிட்ட ஆக்சிஸ் மை இந்தியா நிறுவனம் மேற்கு வங்கத்தின் தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பை வெளியிட மாட்டோம் என அறிவித்துள்ளது.

இதுகுறித்து ஆக்சிஸ் மை இந்தியா நிறுவனர் பிரதீப் குப்தா கூறியதாவது: மேற்கு வங்கத்தில் உள்ள 294 சட்டப்பேரவை தொகுதிகளிலும் பயிற்சி பெற்ற 80 சர்வேயர்கள் மூலம் கருத்து கணிப்பு தகவலை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டோம். ஆனால், அந்தப் பணி சவாலாக இருந்தது.

சுமார் 70% வாக்காளர்கள், தாங்கள் யாருக்கும் வாக்களித்தோம் என்ற தகவலை தெரிவிக்க மறுத்துவிட்டனர். சிலர் தயக்கத்துடன் கூறினர். இதனால் தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பை வெளியிட வேண்டாம் என முடிவு செய்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

# சர்வதேச விமானங்களுக்கான எரிபொருள் விலையை உயர்த்தியது மத்திய அரசு

**புதுடெல்லி, மே 2:**



அமெரிக்கா - இஸ்ரேல் - ஈரான் இடையே நடைபெற்ற போர், தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. போரை நிரந்தரமாக முடிவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகள் இழுபறியாகவே தொடர்ந்து வருகிறது. உலகின் 20 சதவிகிதம் கச்சா எண்ணெய் வர்த்தகம் நடைபெறும் ஹார்முஸ் ஜலசந்தியில், அமெரிக்காவும் ஈரானும் தங்கள் கட்டுப்பாட்டை நிலைநாட்டும் போட்டியில் இருப்பதால் உலகளவில் எண்ணெய்வர்த்தகம்கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், விமான எரிபொருள் விலை அதிகமாகி இருப்பதால் விமான நிறுவனங்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளது.

இந்தநிலையில், சர்வதேச விமானங்களுக்கான எரிபொருள் விலையை 5 சதவீதம் உயர்த்தியது மத்திய அரசு எரிபொருள் விலை உயர்வால் சர்வதேச விமான டிக்கெட் விலை உயர வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. ஏற்கனவே பெரும் நஷ்டத்தை எதிர்கொண்டு வரும் விமான நிறுவனங்கள் விமான எரிபொருள் உயர்வு கூடுதல் சுமையாக மாறியுள்ளது.

பாகிஸ்தான் வான்வெளி மூடல் காரணமாக ஐரோப்பா, வட அமெரிக்கா செல்லும் விமானங்கள் சுற்று பாதையில் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது எரிபொருள் செலவை மேலும் அதிகரிப்பதாக கூறப்படுகிறது.

# இந்தியாவில் இருந்து திருடப்பட்ட 657 பழங்கால சிலைகளை திருப்பி அளித்தது அமெரிக்கா



**புதுடெல்லி, மே 2:**

இந்தியாவில் இருந்து திருடப்பட்ட 657 பழங்கால சிலைகளை அமெரிக்கா திருப்பி அளித்திருக்கிறது. அவற்றின் மதிப்பு ரூ.133 கோடி ஆகும். இந்தியாவில் இருந்து திருடப்பட்ட பழங்கால சிலைகள், புராதன பொருட்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு கடத்தப்பட்டு உள்ளன. பிரதமர் நரேந்திர மோடி வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும்போது, பழங்கால அரிய பொருட்களை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு அந்த நாடுகளின் அரசுகளிடம் வலியுறுத்தி வருகிறார். இதன்படி பல்வேறு பழங்கால சிலைகள் மீட்கப்பட்டு இந்தியாவுக்கு கொண்டுவரப்பட்டுஉள்ளன.

இந்த வரிசையில் இந்தியாவில் இருந்து திருடப்பட்டு அமெரிக்காவுக்கு கடத்தப்பட்ட 657 பழங்கால சிலைகள், அரிய பொருட்கள் திருப்பி அளிக்கப்பட்டு உள்ளன. அவற்றின் மதிப்பு ரூ.133 கோடி ஆகும். அமெரிக்காவின் நியூயார்க் நகரில் கடந்த 28-ம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சியில் 657 பழங்கால சிலைகளை இந்திய தூதரக அதிகாரி ராஜலட்சுமி கடாம் பெற்றுக் கொண்டார்.

இது குறித்து அமெரிக்க அரசு வழக்கறிஞர் ஆல்வின் எல். பிராக் ஜூனியர் கூறும் போது, "அமெரிக்கா முழுவதும் இதுவரை 6,200-க்கும் மேற்பட்ட கலாச்சார பொக்கிஷங்கள் மீட்கப்பட்டு உள்ளன. அவற்றில் 5,900-க்கும் மேற்பட்ட அரிய பொருட்கள் 36 நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டு உள்ளன. இந்த வரிசையில் இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட 657 தொல்பொருட்கள் இந்திய மக்களிடம் திருப்பி அளிக்கப்பட்டு உள்ளன. இந்த பொருட்கள் சுபாஷ் கபூர், நான்சி வீனர் உள்ளிட்டோரால் அமெரிக்காவுக்கு பல்வேறு காலகட்டங்களில் கடத்தி வரப்பட்டவை" என்று தெரிவித்தார். சிலைகளின் விவரங்கள்: சிங்கங்கள் இருபுறமும் அமர்ந்திருக்கும் சிம்மாசனத்தின் மீது இரட்டைத் தாமரை பீடத்தில் அமர்ந்திருக்கும் அவலோகிதேஸ்வரரின் வெண்கலச் சிலை இந்தியாவிடம் திருப்பி வழங்கப்பட்டு இருக்கிறது. ராய்ப்பூரில் உள்ள மஹந்த் கசிதாஸ் நினைவு அருங்காட்சியகத்தில் இருந்து திருடப்பட்ட அவலோகிதேஸ்வரர் சிலை 1982-ம் ஆண்டில் அமெரிக்காவுக்கு கடத்தப்பட்டது. இந்த பழங்கால சிலைகள், அரிய பொருட்கள் விரைவில் இந்தியாவுக்கு கொண்டு வரப்பட உள்ளன.

# மராட்டியத்தில் ரூ. 1 ஆயிரத்து 745 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல்

**மும்பை, மே 2:**




நாடு முழுவதும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பான குற்றங்களை தடுக்க மத்திய , மாநில அரசுகள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றன.

இந்நிலையில், மராட்டிய மாநிலம் மும்பையில் 349 கிலோ எடையுள்ள உயர்தர போதைப்பொருளை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர். பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருளின் மதிப்பு ரூ. 1 ஆயிரத்து 745 கோடி ஆகும். சிறிய அளவிலான போதைப்பொருள் கடத்தல் தொடர்பான விசாரணையின்போது மிகப்பெரியபோதைப்பொருள் கடத்தல்கும்பல்சிக்கியுள்ளது.

இந்த போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக தேசிய போதைப்பொருள் தடுப்பு முகமை விசாரணை நடத்தி வருகிறது. ரூ. 1 ஆயிரத்து 745 கோடி மதிப்புள்ள போதைப்பொருளைபறிமுதல் செய்த அதிகாரிகளுக்கு உள்துறை மந்திரி அமித்ஷா பாராட்டு தெரிவித்துள்ளார்.

# பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு: சத்தீஸ்கர் அரசு தீர்மானம்

**புதுடெல்லி, ஏப்.2:**

பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா மற்றும் தொகுதி மறுவரையறை மசோதா மக்களவையில் தோற்கடிக்கப்பட்டது. இதையடுத்து பெண்கள் இட ஒதுக்கீடு மசோதாவை உடனே அமல்படுத்தக் கோரி தீர்மானம் நிறைவேற்ற சத்தீஸ்கரில் ஒரு நாள் சட்டப்பேரவை சிறப்புக் கூட்டம் நேற்று கூட்டப்பட்டது.

சத்தீஸ்கர் சட்டப்பேரவையில் 4 மணி நேரம் விவாதம் நடைபெற்றது. அப்போது எதிர்க்கட்சி தலைவர் சரண் தாஸ் மகந்த், மக்களவையில் தற்போதுள்ள எம்.பி.க்களின் எண்ணிக்கையிலேயே பெண்களுக்கு 33% இடஒதுக்கீட்டை வழங்க வேண்டுகோள் விடுத்து மற்றொரு தீர்மானத்தை தாக்கல் செய்தார்.

இதை அனுமதிக்க முடியாது என சபாநாயகர் ரமண் சிங் கூறினார். இதேபோல் மத்திய பிரதேச சட்டப்பேரவையில் கடந்த திங்கள் கிழமை, பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கும் மசோதாவை உடனே அமல்படுத்த கோரி தீர்மானம் நிறைவேற்றியது.




## பறக்கும் படை வாகன சோதனையில் ரூ.30,000 லஞ்சம் வாங்கிய ஏட்டு, துணை தாசில்தார் சஸ்பெண்ட்: நாகை கலெக்டர், எஸ்பி அதிரடி

**நாகப்பட்டினம், மே.02:** நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் அருகே அருந்தவபுலம் பகுதியில் கடந்த 22ம்தேதி பறக்கும்படை அலுவலர் ரமேஷ் மற்றும் தலைமை காவலர் வெங்கடேசன் உள்ளிட்ட பறக்கும்படை குழுவினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த காரை நிறுத்தி நடத்திய சோதனையில் காரில் 240 மதுபாட்டில்கள் கடத்தி வந்தது தெரிய வந்தது. பறக்கும் படையினர், 20 மதுபாட்டில்கள் மட்டும் கைப்பற்றப்பட்டதாக ஆவணங்களில் பதிவு செய்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். இதில் மீதமுள்ள மதுபாட்டில்களை வெளிநபர்களிடம் விற்பனை செய்ததாக தகவல் தெரிய வந்தது. இந்த தகவல் நாகப்பட்டினம் எஸ்பி சுஜித் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட தலைமை காவலர் வெங்கடேசனிடம் விசாரணை நடத்தப்பட்டு வந்தது.

விசாரணையில், 240 மதுபாட்டில்கள் கடத்தி வந்த நிலையில் 20 மதுபாட்டில்கள் மட்டும் கைப்பற்றியதாக ஆவணம் தயார் செய்ததும், இதை மறைப்பதற்காக மதுபாட்டில் கடத்தி வந்தவரிடம் ரூ.30,000 லஞ்சம் பெற்றதும் தெரியவந்தது. எஸ்பி உத்தரவின் பேரில் பறக்கும்படை அலுவலர் ரமேஷிடம் வேதாரண்யம் சட்டசபை தொகுதி தேர்தல் அலுவலர் கண்ணன் நடத்திய விசாரணையில் ரமேஷ், வெங்கடேசனுடன் இணைந்து மதுபாட்டில்களை மறைத்ததும், மதுபாட்டில்கள் கடத்தியவரிடம் ரூ.30,000 லஞ்சம் பெற்றதும் தெரியவந்தது. இது தொடர்பாக பறக்கும் படை அலுவலர் ரமேஷை சஸ்பெண்ட் செய்ய, மாவட்ட கலெக்டருக்கு தேர்தல் அலுவலர் பரிந்துரை செய்தார். அதன்பேரில் தேர்தல் பறக்கும்படை அலுவலர் ரமேஷை சஸ்பெண்ட் செய்து கலெக்டர் ஆகாஷ் உத்தரவிட்டார். இதே போல் ஏட்டு வெங்கடேசனை சஸ்பெண்ட் செய்து எஸ்பி சுஜித் உத்தரவிட்டார்.

## பள்ளி மாணவியை கூட்டு பலாத்காரம் செய்து கொன்ற வாலிபர் குற்றவாளி: போக்சோ நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு

### தண்டனை விவரம் மே 5ம் தேதி அறிவிப்பு



**புதுச்சேரி, மே.02:** புதுச்சேரியில் பள்ளி மாணவியை கூட்டு பலாத்காரம் செய்து கொன்ற வாலிபர் குற்றவாளி என பரபரப்பு தீர்ப்பு வழங்கி உள்ள புதுவை போக்சோ நீதிமன்றம், தண்டனை விவரத்தை மே 5ம் தேதி அறிவிக்கப்படும் என்று தெரிவித்து உள்ளது. புதுச்சேரி நகர பகுதியைச் சேர்ந்த 5ம் வகுப்பு மாணவி கடந்த 2024 மார்ச் 2ம் தேதி வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது திடீரென மாயமான நிலையில் பெற்றோர் அளித்த புகாரின்பேரில் முத்தியால்பேட்டை போலீசார் வழக்கு பதிந்து சிறுமியை தீவிரமாக தேடினர். இதனிடையே 3 நாட்களுக்குப்பின் (5ம் தேதி) அதே பகுதியிலுள்ள ஒரு வாய்க்காலில் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் சிறுமியின் உடல் கண்டெடுக்கப்பட்டது. இச்சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இதுதொடர்பாக முத்தியால்பேட்டை போலீசார் கொலை வழக்காக மாற்றி பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதில், அதே பகுதியைச் சேர்ந்த காக்கா (எ) கர்ணாஸ் (20) என்ற இளைஞருடன் சிறுமி கடைசியாக காணப்பட்டதாக தகவல் கிடைத்தது. மறுநாள் கர்ணாஸ் மற்றும் அவரது கூட்டாளியான விவேகானந்தன் (56) ஆகியோர் கைது செய்யப்பட்டனர். விசாரணையில், சிறுமி கூட்டு பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை செய்யப்பட்டது தெரியவந்தது. இதைக் கண்டித்து எதிர்க்கட்சிகள், பல்வேறு அமைப்புகள் மாநிலம் முழுவதும் போராட்டங்களில் ஈடுபட்டன.

இதுதொடர்பான வழக்கு விசாரணை புதுச்சேரி போக்சோ சிறப்பு விரைவு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இதனிடையே காலாப்பட்டு மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த விவேகானந்தன், கடந்த 2024 செப்டம்பர் 16ம் தேதி அதிகாலை சிறை கழிவறையில் தற்கொலை செய்து கொண்டார். அவர் மீதான குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டன. இவ்வழக்கில் கடந்த 15ம் தேதி இறுதிக்கட்ட வாதங்கள் முடிவடைந்தது. சிறுமி மீது நிகழ்த்தப்பட்ட கொடூரமான கூட்டுப் பாலியல் வன்புணர்வைக் கருத்தில் கொண்டு, குற்றம் சாட்டப்பட்டவருக்கு அதிகபட்ச தண்டனை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டுமென வழக்கறிஞர் பிரவீன் வாதத்தை முன்வைத்தார்.

## சிறுமிகளுக்கு பாலியல் தொல்லை: டீ மாஸ்டருக்கு 16 ஆண்டுகள் சிறை



**திருநெல்வேலி, மே.02:** நெல்லை அருகே பேட்டை செக்கடி பகுதியை சேர்ந்த முத்துகுமார் (வயது 41), அந்த பகுதியில் உள்ள டீக்கடை ஒன்றில் டீ மாஸ்டராகப் பணியாற்றி வந்தார். கடந்த 2024-ம் ஆண்டு, 6 மற்றும் 7 வயதுடைய 2 சிறுமிகளுக்கு இவர் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்.

இதுகுறித்து சிறுமிகளின் பெற்றோர்கள் அளித்த புகாரின் பேரில், நெல்லை டவுன் அனைத்து மகளிர் போலீசார் போக்சோ சட்டம் மற்றும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து முத்துகுமாரை கைது செய்தனர்.

இந்த வழக்கு நெல்லை மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி சுரேஷ்குமார் நேற்று தீர்ப்பளித்தார். குற்றம் சாட்டப்பட்ட முத்துகுமாருக்கு 16 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட 2 சிறுமிகளின் குடும்பத்தினருக்கும் தலா ரூ.1 லட்சம் அரசு இழப்பீடாக வழங்க நீதிபதி உத்தரவிட்டார். இந்த வழக்கில் அரசு தரப்பில் வழக்கறிஞர் உஷா ஆஜராகி வாதாடினார்.

## நடைபயிற்சி சென்ற மூதாட்டியிடம் 2 பவுன் நகை பறிப்பு

**சேலம், மே.02:** சேலம் மாவட்டம் சீலநாயக்கன்பட்டியை சேர்ந்தவர் ஜெயலட்சுமி (வயது 65). இவர், நேற்று முன்தினம் இரவு அந்த பகுதியில் நடைபயிற்சியில் ஈடுபட்டு இருந்தார். அப்போது 2 வாலிபர்கள் மோட்டார் சைக்கிளில் மூதாட்டியை பின் தொடர்ந்து சென்றனர். பின்னர் திடீரென்று மோட்டார் சைக்கிளின் பின்புறம் அமர்ந்திருந்த வாலிபர், மூதாட்டி கழுத்தில் அணிந்திருந்த 2 பவுன் சங்கிலியை பறித்துக்கொண்டார். அப்போது மூதாட்டி திருடன், திருடன் என்று கூச்சலிட்டார்.

இதை பார்த்த அந்த வழியாக சென்றவர்கள் சம்பவ இடத்திற்கு ஓடி வந்து கொள்ளையர்களை பிடிக்க முயன்றனர். ஆனால் 2 பேரும் கண் இமைக்கும் நேரத்தில் மோட்டார் சைக்கிளில் தப்பி சென்று தலைமறைவாயினர். இதுகுறித்து ஜெயலட்சுமி அன்னதானப்பட்டி போலீசில் புகார் கொடுத்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து மூதாட்டியிடம் 2 பவுன் சங் கிலியை பறித்து சென்ற கொள்ளையர்களை தேடி வருகின்றனர். சங்கிலி பறிப்பு சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# பொதுமக்கள், பயணிகளின் வசதிக்காக சென்னை ரயில்வே கோட்டத்தில் 11 புதிய நடைமேம்பாலங்கள்



**சென்னை, மே.02:** பொதுமக்கள், பயணிகளின் வசதிக்காக, சென்னை ரயில்வே கோட்டத்தில் கடந்த நிதியாண்டில், 11 புதிய நடைமேம்பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து, சென்னை ரயில்வே கோட்டம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: பயணிகள் பாதுகாப்பை வலுப்படுத்துவதிலும், ரயில் நிலைய உள்கட்டமைப்பை மேம்படுத்துவதிலும் ஒரு முக்கிய நடவடிக்கையாக, தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டம், 2025-26-ம் நிதியாண்டில் சென்னை கோட்டத்துக்கு உட்பட்ட ரயில் நிலையங்களில், பயணிகள் தண்டவாளங்களைக் கடக்கும் ஆபத்தான முறையைத் தவிர்க்க புதிய நடைமேம்பாலங்கள் அமைக்கப்படுகின்றன.

அந்த வகையில், கடந்த நிதியாண்டில், 11 புதிய நடைமேம்பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நடைமேம்பாலங்களில் ஒன்று 'அம்ரித் ரயில் நிலையத் திட்டத்தின்' கீழ் கட்டப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் முக்கிய சிறப்பம்சமாக, 2026-ம் ஆண்டு மார்ச்சில் திருத்தணி ரயில் நிலையத்தின் 12 மீட்டர் அகலமுள்ள பிரம்மாண்டமான நடைமேம்பாலம் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

அதிக அளவிலான பயணிகளைக் கையாளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த மேம்பாலம், குறிப்பாக, கூட்ட நெரிசல் அதிகமுள்ள நேரங்களிலும், திருவிழாக் காலங்களிலும் பயணிகள் தடையின்றி பாதுகாப்பாகச் செல்ல உதவுகிறது.

இதேபோல், பயணிகள் நடமாட்டம் அதிகமுள்ள வாலாஜா பாத், திருமால்பூர் மற்றும் அன்வர்திகன் பேட்டை ஆகிய நிலையங்களிலும் புதிய நடைமேம்பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சித்தேரி, முகுந்தராயபுரம், பூடி, வேப்பகுண்டா, பொன்பாடி மற்றும் பாலூர் ஆகிய நிலையங்களிலும் புதிய நடைமேம்பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவை முதியவர்கள் மற்றும் சுமை தூக்கிச் செல்லும் பயணிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் தண்டவாளங்களைக் கடக்காமல் பாதுகாப்பாக நடைமேடைகளுக்குச் செல்ல வழிவகை செய்கின்றன.

வரும் காலங்களில், மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள் (Divyangjan-friendly features) உள்ளிட்ட கூடுதல் வசதிகள் மேம்படுத்தப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னையில் இணை ஆணையர் உட்பட ஒரே நாளில் 40 போலீஸார் பணி ஓய்வு



**சென்னை, மே.02:** இணை ஆணையர் உட்பட சென்னையில் ஒரே நாளில் 40 போலீஸார் பணி ஓய்வு பெற்றனர். சென்னை காவல் துறையில்,தலைமையிடத்து இணை ஆணையராக எஸ்.மகேஸ்வரன் பணியாற்றி வந்தார்.

இவர் மற்றும் உதவி ஆணையர் ராஜா, காவல் ஆய்வாளர் ஹரிதாஸ் மற்றும் 16 காவல் உதவி ஆய்வாளர்கள், 20 சிறப்பு உதவி ஆய்வாளர்கள் மற்றும் 1 பெண் தலைமைக் காவலர் என மொத்தம் 40 போலீஸார் நேற்றுடன் பணி ஓய்வு பெற்றனர். இவர்களுக்கான பணி நிறை வுபாராட்டு விழா, வேப்பேரியில் உள்ள காவல் ஆணையர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

காவல் ஆணையர் அபின் தினேஷ் மோடக், பணி ஓய்வு பெற்ற 40 பேருக்கும் பொன்னாடை போர்த்தி, பாராட்டி சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

பணி ஓய்வு பெற்ற போலீஸார், 22 ஆண்டுகள் முதல் 41 ஆண்டுகள் வரை சிறப்பாக பணிபுரிந்துள்ளனர்.

அவர்களால் தமிழக காவல் துறைக்கும், சென்னை பெருநகர காவல்துறைக்கும் பெருமை கிடைத்துள்ளது.

ஓய்வு பெறுகின்ற காவல் துறையினர் தங்களது உடல் நலனில் அக்கறை செலுத்த வேண்டும் என காவல் ஆணையர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், காவல் கூடுதல் ஆணையர் (தலைமையிடம்) ஜோஷி நிர்மல் குமார், துணை ஆணையர்கள் சுப்பு லட்சுமி, கண்ணன் உட்பட பலர் பங்கேற்றனர்.

# கரூர் அருகே காருக்குள் மூச்சுத்திணறி சிறுவன் உயிரிழப்பு





**கரூர், மே.02:** வீட்டருகே உறை போட்டு மூடியிருந்து காரினுள் ஏறி விளையாடிய சிறுவன், கதவு பூட்டிக் கொண்டதால் மூச்சுத் திணறி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கரூர் மாவட்டம் குளித்தலை அருகேயுள்ள கழுகூரை சேர்ந்தவர் வேலு (36). மனைவி மாரிஸ்வரி (30). மகன் சஞ்சீவி (4). வேலு மாரிஸ்வரி தம்பதியனர் கொத்தனார், சித்தாளாக உள்ளனர். இவர்களின் மகன் சஞ்சீவி நேற்று அப்பகுதியை சேர்ந்த சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது வீட்டருகே உறைப்போட்டு (கார் கவர்) மூடி நிறுத்தப்பட்டிருந்த காரினுள் ஏறி விளையாடியுள்ளார். அப்போது எதிர்பாராத விதமாக கதவு பூட்டிக்கொண்டதால் திறக்க முடியாமல் சிறுவன் சஞ்சீவி வெளியேற முடியமல் சிக்கிகொண்டார்.

விளையாட சென்ற மகனை காணவில்லை என பதறிய பெற்றோர், உறவினர்கள் நீண்ட நேரமாகியும் கண்டு பிடிக்க முடியாமல் தவித்துள்ளனர். சந்தேகத்தின் பேரில் வீட்டருகே நின்ற காரின் உறையை அகற்றி விட்டு கண்ணாடி வழியாக காரினுள் பார்த்தப்போது சிறுவன் சஞ்சீவி காரினுள் மயங்கிய நிலையில் கிடந்துள்ளார்.

உடனடியாக கார் கதவை திறந்த பெற்றோர் சிறுவனை மீட்டு குளித்தலை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு சிறுவனை பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து தோகை மலை போலீஸார் வழக்குப் பதிவு செய்து சிறுவன் உடலை கைப்பற்றி அதே மருத்துவமனையில் பிரேத பரிசோதனக்கு அனுப்பி விசாரணை நடத்தி வருகின்றனர். மருத்துவமனையில் இருந்த சிறுவனின் பெற்றோர், உறவினர்கள், திரண்டிருந்த கிராமத்தினர் கதறி அழுதது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# பைக்குகள் நேருக்கு நேர் மோதல்: திருவிழா பார்க்க வந்த இருவர் உட்பட மூவர் உயிரிழப்பு

**மதுரை, மே.02:** மதுரை நத்தம் மேம்பாலத்தில் இரண்டு பைக்குகள் நேருக்கு நேர் மோதிய விபத்து காரணமாக சித்திரை திருவிழா பார்க்க வந்த இரண்டு இளைஞர்கள் உட்பட 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதியை சேர்ந்தவர்கள் சல்மான் கான் (21), விஷ்வா(21) விக்னேஷ் (22).இவர்கள் மூவரும் கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் சித்திரை திருவிழாவைப் பார்க்க நத்தத்திலிருந்து ஒரே பைக்கில் நேற்று இரவு மதுரைக்கு வந்தனர்.

பைக்கை சல்மான் கான் ஓட்டியுள்ளார். நள்ளிரவு 12:30 மணிக்கு நத்தம் மேம்பாலத்தில் அவர்கள் வந்து கொண்டிருந்தனர்.

எதிரே மற்றொரு பைக்கில் மதுரை ஒத்தக்கடையை சேர்ந்த மாதேஷ் (27) என்பவர் ஒரு வழி பாதையில் சென்றுள்ளர். இவர் ஒரு வழி பாதையில் வருவதை சல்மான் கான் சற்றும் எதிர்பார்க்காவில்லை. இதனால், அவரது பைக், மாதேஷ் பைக் மீது மோதியது. இதில் நான்கு பேரும் தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடைந்தனர். தகவல் அறிந்த தல்லாகுளம் போக்குவரத்து புலனாய்வு போலீசார் சம்பவ இடத்திற்கு சென்றனர்.

காயம் அடைந்த அவர்களை மீட்டு மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். ஆனாலும், சல்மான் கான் விஷ்வா, மாதேஷ் ஆகியோர் வழியில் பரிதாபமாக உயிரிழந்தனர். படுகாயம் அடைந்த விக்னேஷ் சிகிச்சை பெறுகிறார். சம்பவம் குறித்து தல்லாகுளம் போக்குவரத்து புலனாய்வு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரிக்கின்றனர். சித்திரை திருவிழா பார்க்க வந்த இரண்டு இளைஞர்கள் உட்பட 3 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# திருச்செந்தூருக்கு படையெடுக்கும் அரசியல் கட்சியினர்: 20-க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் சுவாமி தரிசனம்



தூத்துக்குடி: தமிழக சட்டப்பேரவை தேர்தல் முடிவுகள் மே 4-ம் தேதி வெளியாகவுள்ள நிலையில், திருச்செந்தூர் கோயிலுக்கு அரசியல் கட்சியினர், வேட்பாளர்கள் படையெடுத்து வருகின்றனர்.

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமியின் மனைவி ராதா நேற்று திருச்செந்தூரில் சுவாமி தரிசனம் செய்தார். சட்டப்பேரவை தேர்தல் கடந்த 23-ம் தேதி நடைபெற்றது. வாக்கு எண்ணிக்கை மே 4-ம் தேதி நடைபெறவுள்ள நிலையில், தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகள் நேற்று முன்தினம் மாலை வெளியாகின.

தெளிவற்ற கருத்து கணிப்புகள்

இதில் திமுக தலைமையிலான கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெறும் என பெரும்பாலான கருத்துக் கணிப்புகள் தெரிவித்தாலும், அதிமுக கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற வாய்ப்பு இருப்பதாக சில கருத்துக் கணிப்புகளும், தவெக அதிகமாக வெல்ல வாய்ப்பு இருப்பதாக ஒன்றிரண்டு கருத்துக் கணிப்புகளும் தெரிவித்துள்ளன. இதனால் தெளிவற்ற நிலை காணப்படுகிறது.

இந்நிலையில், அரசியல் கட்சியினர், வேட்பாளர்கள் வழிபாட்டு தலங்களை நோக்கி படையெடுக்கத் தொடங்கியுள்ளனர். குறிப்பாக, திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலை நோக்கி அதிகமானோர் வந்த வண்ணம் உள்ளனர்.

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் 2-ம் படை வீடான திருச்செந்தூரில், சூரபத்மனை, சுவாமி ஜெயந்திநாதர் வெற்றி கொண்டார். இதனால் இந்த கோயிலில் வழிபட்டால் எதிரிகள் மற்றும் எதிர் வினைகளை வென்றுவிடலாம் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

இதன்படி அரசியல் கட்சியினரும், வேட்பாளர்களும் திருச்செந்தூர் கோயிலுக்கு வந்த வண்ணம் உள்ளனர். தவெக தலைவர் விஜய், கடந்த 28-ம் தேதி திருச்செந்தூர் கோயிலில் வேலுடன் விஸ்வரூப தரிசனத்தில் பங்கேற்று வழிபாடு நடத்தினார்.

அதேநாளில் அதிமுகவின் முன்னாள் அமைச்சர்களும், தற்போதைய வேட்பாளர்களுமான ஆர்.பி.உதயகுமார், கே.டி.ராஜேந்திர பாலாஜி, எம்.சி.சம்பத் ஆகியோர் திருச்செந்தூர் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தனர்.

நேற்று முன்தினம் திமுக அமைச்சர்களும், தற்போதையை வேட்பாளர்களுமான பி.கே.சேகர்பாபு, அனிதா ராதாகிருஷ்ணன், ஓட்டப்பிடாரம் தொகுதி திமுக வேட்பாளர் ராமஜெயம் ஆகியோர் தரிசனம் செய்தனர்.

இதுபோல திமுக அமைச்சர் அன்பில் மகேஷ் மற்றும் திமுக, அதிமுக உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள், முக்கிய நிர்வாகிகள் சிலர் அடுத்தடுத்து இங்கு தரிசனம் செய்தனர்.

இந்நிலையில், அதிமுக பொதுச்செயலாளரும், முன்னாள் முதல்வருமான பழனிசாமியின் மனைவி ராதா நேற்று திருச்செந்தூர் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் கோயிலுக்கு வந்த அவர், விஸ்வரூப தரிசனத்தில் பங்கேற்று மூலவர்சுப்பிரமணிய சுவாமியை வழிபட்டார். முன்னதாக கோயில் நிர்வாகம் சார்பில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவு முடிந்த பிறகு இதுவரை 20-க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள், கட்சி தலைவர்கள் திருச்செந்தூர் கோயிலில் சுவாமி தரிசனம் செய்துள்ளனர்.

வாக்கு எண்ணிக்கைக்கு இன்னும் 3 நாட்கள் உள்ள நிலையில் மேலும் பல தலைவர்கள், வேட்பாளர்கள் திருச்செந்தூர் கோயிலுக்கு வர வாய்ப்பு இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மானாமதுரை வைகை ஆற்றில் வீர அழகர் வெண் மஞ்சள் பட்டு அணிந்து இறங்கினார்







மானாமதுரை, மே.02: சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் வைகை ஆற்று கரையில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ ஆனந்த வல்லி அம்மன் சோமநாதர் கோவில், வீர அழகர் கோவில் உள்ளது. ஆண்டு தோறும் 10 நாட்கள் சித்திரை திருவிழா நடைபெறும். இந்த ஆண்டு சித்திரை திருவிழா ஆனந்த வல்லி சோமநாதர் கோவிலில் கடந்த 21ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. இன்று 11 மணிக்கு ஆனந்த வல்லி சோமநாதர் திருக்கல்யாணம் நடைபெற்றது.

இதேபோல் வீர அழகர் கோவிலில் சுந்தரராஜ பெருமாளுக்கு 27 ந்தேதி காப்பு கட்டுதல் நிகழ்ச்சியுடன் சித்திரை திருவிழா தொடங்கியது. இந்தக் கோவிலில் மூலவர் சுந் தரராஜப் பெருமாள் எனும் நாமத் துடன் எழுந்தருளி அருள்பா லிக்கிறார்.

தொடர்ந்து வீர அழகர் பல்லாக்கு, ஹனுமான் வாகனத்தில் எழுந்தருளி காட்சி கொடுத்தார். நேற்று இரவுவீர அழகர் பூ பல்லாக்கில் எழுந்தருளினார். இரவு எதிர் சேவை நடைபெற்றது. இன்று அதிகாலை கள்ளழகர் திருக்கோலத்துடன் வெள்ளை குதிரை வாகனத்தில் வீர அழகர் வெண்பட்டு ஆடைமஞ்சள் பட்டு வஸ்திரம் அணிந்து அப்பன் பெருமாள், தியாகவிநோதபெருமாள் நான்கு ரத வீதிகளில் வலம் வந்து ஆனந்த வல்லி அம்மன் சோமநாதர் கோவில் முன்பு உள்ள வைகை ஆற்றில் இறங்கினார்.

அப்போது ஏராளமான பக்தர்கள் தண்ணீர் பீச்சி அடித்து கோவிந்தா கோவிந்தா என கோஷம் எழுப்பினர்.

வைகை ஆற்றில் ஏராளமான திருகண் பந்தல்களில் எழுந்தருளி பின் ஆயிரம் பொன் சப்பரத்தில் எழுந்தருளினார் ஏராளமான பக்தர்கள் வீர அழகரை வழிபாடு செய்தனர்.

நாளை மே 2-ஆம் தேதி சனிக்கிழமை இரவு மானாமதுரை கிராமத்தார் மண்டகப்படியில் வைகை ஆற்றுக்குள் நிலாச் சோறு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

தொடர்ந்து வரும் 6 ந்தேதி மானாமதுரை கடைவீதி முழுவதும் வீர அழகர் எழுந்தருளுவார் அன்று உற்சவம் ஸாந்தி நிகழ்ச்சியுடன் சித்திரை திருவிழா நிறைவடைகிறது.

# 'நட்புடன் உங்களோடு' திட்டத்தில் மனநல ஆலோசனைப் பெற கட்டணமில்லா தொலைபேசி எண் அறிவிப்பு

சென்னை, மே.02: தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மருத்துவ பட்டப்படிப்புகளில் சேருவதற்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு வருகின்ற 03.04.2026 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெற உள்ளது.

மாணவர்களின் மன உறுதி மற்றும் மனநலம் காக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் 'நட்புடன் உங்களோடு' திட்டம் மூலம் தொலைபேசி வழியாக மனநல ஆலோசனைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, டெலி கவுன்சிலிங் (Tele Counselling) தேவைப்படும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தயங்காமல் 14416 அல்லது 104 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு மனநல ஆலோசனைகளை தவறாமல் பெற்றுக் கொள்ளலாம்.

24 மணி நேரமும் பயிற்சி பெற்ற மனநல ஆலோசகர்கள், மருத்துவர்கள் மூலம் கட்டணமின்றி இச்சேவை வழங்கப்பட்டு வருகிறது.

## 10 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு - வானிலை ஆய்வு மையம்

தமிழகத்தில் கோடை வெயில் படிப்படியாக அதிகரித்து வரும் நிலையில், தெற்கு உள் கர்நாடகா முதல் மன்னார் வளைகுடா வரை தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி- மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் லேசான மழை இன்று பெய்யக்கூடும்.


நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும்.


நாளை (2-ந்தேதி) நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வுமையம் தெரிவித்து உள்ளது.


இதற்கிடையில் தமிழகத்தில் வருகிற 4-ந்தேதி வரை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் அதிகரிக்கும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் இன்று பெரும்பாலான மாவட்டங்களில் 100 டிகிரிக்கு மேலாக வெப்பம் கொளுத்தியது.

# மானாமதுரை ஆற்றில் இறங்கும் வீர அழகரை காண வந்த பக்தர்களுக்கு சுந்தர விநாயகர் கோவிலில் அன்ன பிரசாதம் வழங்கப்பட்டது







மானாமதுரை, மே.02: சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வைகை ஆற்று கரையில் பிரசித்தி பெற்ற ஶ்ரீ ஆனந்த வல்லி சோமநாதர் கோவில் மற்றும் வீர அழகர் கோவில் உள்ளது. ஆண்டு தோறும் பத்து நாட்கள் நடைபெறும் நிகழ்ச்சியில் சிகர நிகழ்ச்சியாக வீர அழகர் ஆற்றில் இறங்கும் வைபவம் நடைபெறும்.

இதை காண வைகை ஆற்றில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருவார்கள். ஆற்றில் இறங்கும் வீர அழகரை காண வருகை தரும் பக்தர்களுக்காக சுந்தர புரம் தெருவில் உள்ள புகழ்பெற்ற ஶ்ரீ சுந்தர விநாயகர் கோவிலில் சிறப்பு அன்னபிரசாதம் வழங்கப்பட்டது. கோவில் நிர்வாகடிரஸ்டி முன்னாள் ராணுவ வீரர் ராஜேந்திர பிரசாத் தமிழரசி முன்னிலையில் ப்ரத்யங்கிரா தேவி கோவில் ஸ்தபதி சண்முகம் அன்ன பிரசாதம் மற்றும் நீர் மோர் பக்தர்கள் அனைவருக்கும் வழங்கினார்.

விழாவில் ஆன்மிக மலர் டிரஸ்ட் வெளியிட்ட மானாமதுரை சித்திரை திருவிழா சிறப்பிதழ்கள் ஏராளமான பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. இதற்க்கான ஏற்பாட்டை சென்னை ஆன்மிக மலர் டிரஸ்ட் நிர்வாகம் சார்பில் செய்யப்பட்டது.

# சென்னையின் குடிநீர் தேவைக்காக சோழவரம் ஏரியில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் புழல் ஏரியை வந்தடைந்தது



புழல், மே.02: சென்னையின் குடிநீர் தேவைக்காக சோழவரம் ஏரியில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் புழல் ஏரியை நேற்று வந்தடைந்தது.

சென்னைக்கு குடிநீர் வழங்கும் வழங்குவதில் செம்பரம்பாக்கம், புழல், பூண்டி, சோழவரம்,கண்ணன்கோட்டை ஆகிய 5 ஏரிகள் முக்கிய பங்கு வகித்து வருகின்றன. தற்போது, கோடை காலம் தொடங்கிய நிலையில் சோழவரம் ஏரியில் இருந்து நீர் வற்றி வீணாவதை தவிர்க்கும் வகையில் புழல் ஏரிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

சோழவரம் ஏரியிலிருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் புழல் ஏரியை நேற்று வந்தடைந்தது.

நீண்ட நாட்களுக்கு பிறகு புழல் ஏரிக்கு மீண்டும் 260 கன அடி நீர்வரத்து வரத் தொடங்கியது. 3300 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட புழல் ஏரியில் 2002 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது. 21.2 அடி உயரம் கொண்ட புழல் ஏரியில் 14.75 அடி உயரத்தில் தண்ணீர் நிரம்பி உள்ளது. 260 கன அடி நீர்வரத்து வந்து கொண்டிருக்கிறது. சென்னை குடிநீருக்காக புழல் ஏரியில் இருந்து 184 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

இதேபோல 1081 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட சோழவரம் ஏரியில் 459 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது.

18.86 அடி உயரம் கொண்ட சோழவரம் ஏரியில் 11.19 அடி உயரத்தில் தண்ணீர் நிரம்பி உள்ளது. புழல் ஏரிக்கு திறக்கப்பட்டு வந்த நீர் 225 கன அடியில் இருந்து 340 கன அடியாக அதிகரித்து திறக்கப்பட்டு வருகிறது.

நீர்வரத்து ஏதும் இல்லை. கோடைக்காலம் சுட்டெரித்து வரக்கூடிய நிலையில் நீர் வற்றி தண்ணீர் வீணாவதை தவிர்க்கும் வகையில் சோழவரம் ஏரி நீர் புழல் ஏரிக்கு கொண்டு சென்று பயன்படுத்தப்படும் என நீர்வளத்துறை அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருச்சி அருகே த.வெ.க. அலுவலகம் தீ வைத்து எரிப்பு- பிளக்ஸ் பேனர்களை கிழித்து சூறையாடிய மர்ம நபர்கள்

குளித்தலை, மே.02: பெட்டவாய்த்தலை அருகே திருச்சி-கரூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் காமநாயக்கன்பாளையம் கிராமம் அமைந்துள்ளது. ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதிக்கு உள்பட்ட இந்த பகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் திருச்சி மாநகர் மாவட்ட விவசாய அணி அலுவலகம் செயல்பட்டு வருகிறது.

நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலின்போது, இங்கு அமைக்கப்பட்டிருந்த கூரை வேயப்பட்ட அலுவலகத்தில் நிர்வாகிகள் தினமும் ஒன்று கூடி, இங்கிருந்து பிரசாரத்திற்கு செல்வது, கூட்டம் நடத்துவது போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். அங்கு த.வெ.க.வின் பிளக்ஸ் பேனர்கள், கட்சி கொடிகள் உள்ளிட்டவை வைக்கப்பட்டு இருந்தன.

இந்தநிலையில் நேற்று நள்ளிரவில் அங்கு வந்த மர்மநபர்கள் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பிளக்ஸ் பேனர்களை கத்தியால் கிழித்தும், அலுவலகத்தில் 20-க்கு 20 அடி பரப்பளவு கொண்ட கீற்று கொட்டகைக்கு தீ வைத்து எரித்துள்ளனர். கும்பலாக வந்து இந்த செயலில் அவர்கள் ஈடுபட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இந்த சம்பவத்தில் அந்த இடம் முழுவதும் எரிந்து நாசமானது.

இதில் ரூ.50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொருட்கள் எரிந்து சாம்பலானது. இன்று காலை அங்கு வந்த பொதுமக்கள் உடனடியாக த.வெ.க. நிர்வாகிகளுக்கு தகவல் தெரிவித்தனர். அடுத்த ஒருசில நிமிடங்களில் அந்த பகுதியில் திரளான த.வெ.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரண்டனர். இதனால் அங்கு பரபரப்பான சூழல் நிலவியது.

த.வெ.க. அலுவலகத்திற்கு தீயிட்டு கொளுத்திய மர்மநபர்கள் குறித்து திருச்சி மாநகர மாவட்ட விவசாய அணி செயலாளர் வீரசிவா, பெட்டவாய்த்தலை போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

அதன்பேரில் போலீசார் நள்ளிரவில் தீயிட்டு கொளுத்தியும், கத்தியால் கிழித்த மர்மநபர்கள் யார் என்பது குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தேசிய நெடுஞ்சாலை அருகில் தமிழக வெற்றிக் கழக அலுவலகத்தை மர்மநபர்கள் தீயிட்டு எரித்த சம்பவம் அப்பகுதியில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தேர்தல் முடிவுகள் வருவதற்கு முன்பே இதுபோன்ற சம்பவங்கள் நடப்பது மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி இருக்கிறது.




# "தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் திமுகவின் சித்து விளையாட்டுகளே": அன்புமணி



சென்னை, மே.02: மோசடிகளுக்கும், முறைகேடுகளுக்கும் இடம் கொடுக்காமல் அதிமுக, பாமக மற்றும் கூட்டணி கட்சி முகவர்கள் கவனத்துடனும், விழிப்புடனும் பணியாற்ற வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "தமிழ்நாட்டில் கடந்த ஏப்ரல் 23ம் தேதி நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் வரும் மே 4ம் தேதி எண்ணப்படுகின்றன. அரும்பாடு பட்டு செய்த வெள்ளாமையின் பயன்களை அறுவடை செய்து வீட்டுக்கு கொண்டு வரும் நடைமுறைக்கு ஒப்பானது தான் வாக்கு எண்ணிக்கை என்பதால் அதில் அதிமுக மற்றும் பாமக கூட்டணி கட்சிகளின் முகவர்கள் மிகவும் விழிப்புடன் செயல்பட வேண்டும்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்காக மார்ச் மாத மத்தியில் தொடங்கி ஏப்ரல் 21ம் தேதி வரை நடைபெற்ற பரப்புரையின் போது தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களின் வெற்றிக்காக இரவு, பகல் பாராமலும், கடும் வெயிலையும் பொருட்படுத்தாமலும் உழைத்ததிலும், ஏப்ரல் 23ம் தேதி நடைபெற்ற வாக்குப்பதிவின் போது தேனீக்களைப் போலப் பணியாற்றி அனைத்து வாக்காளர்களையும் வாக்குச்சாவடிகளுக்கு கொண்டு சென்று வாக்களிக்கச் செய்ததிலும் அதிமுக, பாமக, பாஜக, அமமுக, தமாகா, ஐஜேகே, புதிய நீதிக் கட்சி, புரட்சி பாரதம் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் இடையே காணப்பட்ட ஒருங்கிணைப்பு வியப்பையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது.

சட்டப்பேரவைத் தேர்தலில் பரப்புரை, வாக்குப்பதிவு என இதுவரை நாம் கடந்து வந்த இரு கட்டங்களை விட வரும் மே 4ம் தேதி நடைபெறவுள்ள வாக்கு எண்ணிக்கை எனும் மூன்றாம் கட்டம் தான் மிகவும் முக்கியமாகும். இந்தத் தேர்தலில் வெற்றி நமக்கு தான் என்பதை தேர்தல் பரப்புரையின் போதே நன்றாக அறிந்து கொள்ள முடிந்தது. வாக்குப்பதிவு நாளன்றும் ஆட்சியாளர்களுக்கு எதிரான தங்களின் கோபத்தை மக்கள் வெளிப்படுத்தியதைப் பார்க்க முடிந்தது. நாம் அடையப் போகும் இந்த வெற்றிக்கு அதிகாரப்பூர்வ அந்தஸ்து வழங்கப்போவது மே 4ம் தேதி நடைபெறவுள்ள வாக்கு எண்ணிக்கையின் நிறைவில் அறிவிக்கப்படவுள்ள அதிகாரப்பூர்வ முடிவுகள் தான். அதனால் தான் வாக்கு எண்ணிக்கை எனும் மூன்றாம் கட்டத்தில் நாம் இன்னும் விழிப்புடனும், ஒருங்கிணைப்புடனும் பணியாற்ற வேண்டும்.

ஐந்தாண்டு காலமாக தமிழ்நாட்டைச் சுரண்டி கொள்ளையடித்த திமுக, ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள அனைத்து வகையான தில்லு முல்லுகளையும் அரங்கேற்றும். தமிழ்நாட்டில் வெளியாகியுள்ள தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகளில் பலவும் கூட திமுகவின் சித்து விளையாட்டுகள் தான். மக்களுடன் மக்களாக களப்பணியாற்றி, அவர்களின் நாடித்துடிப்பை நன்கு அறிந்த நமக்கு மக்களின் மனநிலையும், ஆட்சியாளர்களுக்கு எதிரான கோபமும் நன்றாகத் தெரியும். அவ்வாறு இருக்கும் போது செயற்கையாக சித்தரிக்கப்பட்ட தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகளை எவரும் நம்பத் தேவையில்லை. மாறாக, வாக்கு எண்ணிக்கை நாளில் வாக்கு எண்ணும் மையங்களில் விழிப்புடன் பணியாற்ற வேண்டும்.

பாமக மற்றும் கூட்டணி கட்சிகளின் சார்பில் வாக்கு எண்ணிக்கை முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ள அனைவரும் வாக்கு எண்ணும் நாளான மே 4ம் தேதி காலை 6 மணிக்கே வாக்கு எண்ணும் மையத்திற்கு சென்று விட வேண்டும். வாக்கு எண்ணிக்கைக்குத் தேவையான அனைத்து படிவங்களையும் முகவர்களுக்கு வழங்க வேண்டும். ஒவ்வொரு சுற்று வாக்கு எண்ணிக்கைத் தொடங்குவதற்கு முன்பாக ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் பதிவானதாக 17 சி படிவத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் வாக்கு எண்ணிக்கையும், அந்த வாக்குச்சாவடியில் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு எந்திரத்தில் பதிவாகியிருக்கும் வாக்குகளின் எண்ணிக்கையும் ஒன்றாக உள்ளனவா? என்பதை சரி பார்க்க வேண்டும். அதன் பின்னர் தான் வாக்கு எண்ணிக்கையைத் தொடங்குவதற்கே அனுமதிக்க வேண்டும்.

எத்தகைய சூழலிலும் ஒரு சுற்று வாக்கு எண்ணிக்கை நடத்தி முடிக்கப்பட்டு, அதன் விவரங்கள் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்படுவதற்கு முன் அடுத்த சுற்று வாக்கு எண்ணிக்கையை தொடங்க அனுமதிக்கக் கூடாது. வாக்கு எண்ணும் மையங்களில் தொகுதியின் தேர்தல் அதிகாரி, பார்வையாளர் ஆகியோரிடம் அறிமுகம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வாக்கு எண்ணிக்கையில் ஏதேனும் தவறுகள் நடந்தால் உடனடியாக அவர்களிடம் புகார் செய்ய வேண்டும். அதையும் மீறி முறைகேடுகளில் ஈடுபட எவரேனும் முயன்றால் உடனடியாக தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு எழுத்து மூலம் புகார் தெரிவிக்க வேண்டும்.

வாக்குப்பதிவு எந்திரங்களில் பதிவான வாக்குகளை எண்ணுவதற்கு முன்பாகவே அஞ்சல் வாக்குகள் எண்ணி முடிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். அதிகபட்சமாக கடைசி இரு சுற்றுகளின் வாக்கு எண்ணிக்கை தொடங்குவதற்கு முன்பாக அஞ்சல் வாக்கு எண்ணிக்கையின் முடிவுகள் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்படுவதை பாமக மற்றும் கூட்டணி கட்சிகளின் முகவர்கள் உறுதி செய்ய வேண்டும். வாக்கு எண்ணிக்கையின் எந்த சூழலிலும் முகவர்கள் அவர்களின் கடமையில் இருந்து விலகக் கூடாது.

தமிழ்நாட்டின் தலை விதியைத் தீர்மானிக்கப் போவது இந்தத் தேர்தலின் முடிவுகள் தான். அதில் எந்த மோசடிகளுக்கும், முறைகேடுகளுக்கும் இடம் கொடுக்காமல் அதிமுக, பாமக மற்றும் கூட்டணி கட்சிகளின் முகவர்கள் கவனத்துடனும், விழிப்புடனும் பணியாற்ற வேண்டும். வெற்றி நமதே!" என்று அன்புமணி அறிவுறுத்தியுள்ளார்.

# கருத்துக்கணிப்பு: உண்மையான தீர்ப்பு வரும்வரை காத்திருப்போம் - தமிழிசை சவுந்தரராஜன்



சென்னை, மே.02: சென்னையில் பாஜக மூத்த தலைவர் தமிழிசை தமிழிசை சவுந்தராஜன் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

போர்ச்சூழல் காரணமாக வணிக சிலிண்டர் விலை உயர்வு என்பது தற்காலிக மாற்றம் மட்டுமே. உலக நாடுகள் எல்லாம் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தி கொண்டிருக்கும் வேளையில் இந்தியாவில் மட்டும் உயராமல் இருப்பது பிரதமர் மோடியின் நிர்வாக திறமையை காட்டுகிறது.

இந்தியாவில் பிரதமர் மோடியின் நிர்வாகத் திறமையால் பெட்ரோல், டீசல், வீட்டு சிலிண்டர் விலை உயரவில்லை. வர்த்தக சிலிண்டர் விலை உயர்வு தற்காலிகமான மாற்றம்; போரின் தாக்கம் எப்படி இருக்கும் என்பதை சிந்திக்க வேண்டும்.

கருத்துக்கணிப்புகள் பற்றி இப்போது கருத்து சொல்ல வேண்டாம். உண்மையான தீர்ப்பு வரும்வரை காத்திருப்போம் என்றார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM